
# நான்

உளவியல் சஞ்சிகை




மலர் – 26

இதழ் – 05

புரட்டாதி – ஐப்பசி 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
உளவியல் சஞ்சிகை
மலர்: 26
இதழ்: 05
புரட்டாதி-ஐப்பசி 2001 விலை 15/=

ஆசிரியர்:
போல் நட்சத்திரம் O.M.I, B.Th, STL

இணையாசிரியர்:
பொன்சியன் O.M.I, B.Th, B.A. (Hons)

ஒருங்கிணைப்பாளர்:
ஜெயந்தன் O.M.I., B.Th., Rome

நிர்வாகக் குழு:
அ.ம.தி.இறையியல் சகோதரர்கள்
ஜோசப் பாலா

ஆலோசகர் குழு:
டேமியன் O.M.I., M.A.
டானியல் O.M.I, M.A.
செல்வரெட்ணம் O.M.I, Ph. D.
N. சண்முகலிங்கன், Ph.D.
Dr. R. சிவஷங்கர் M.B.B.S.
றீனா H.C. Dip. in Counselling, Kent
ஜீவனதாஸ்
(O.M.I, B.A. (Hons), B.Th., Dip.Ed.)
ஜீவா போல் O.M.I, M.Phil.

உள்ளே..........

ஆசிரியா அரும்புகள்
தொடர்பா? அது என்ன
அரசியல் தொடர்பாடலின் பரிமாணம்
ஆத்மாவின் சத்தம்
முன்னேற்றத்தின் ஏணி தொடர்பாடல்
வதந்தி
ஊர்க்கிளி
பேச்சற்ற தொடர்பு-சொல்லாத செய்தி
புலனிழந்தோரும் தொடர்புலகில் - வெற்றியாளர்களே
கருத்துக்குவியல் - 87
தொலை உளத் தொடர்பு
வியாபாரத் தொடர்பாடல்
உளவியல் பற்றி கொஞ்சம் உங்களுடன்
மனித முன்னேற்றத்தில் தொடர்பாடல்
வாலிப வசந்தம்
சமூக நோய்களின் மேல் ஒரு கண்

தொடர்புகளுக்கு

"நான்",
டி மசனட் இறையியலகம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

'NAAN'
Tamil Psychological Magazine
De Mazenod Scholasticate,
Columbuthurai,
Jaffna, Sri Lanka.

Tel. & Fax. 021 - 2721

## ஆசிரியர் அரும்புகள்

தொடர்பற்ற / தொடர்பறுந்த மனிதவாழ்வு மரணித்து விடுகின்றதென்பது ஜோன் பவெல்லின் (John Powel) கருதுகோள். தொடர்பிலும் தொடர் பாடலிலும்தான் மனிதவாழ்வு இயக்கமும், வீச்சும், முனைப்பும் பெறுகின்றதென்பது பொதுத்தத்துவம். தனிமையில் வாழும் மனிதன் அதி உச்சதுன்பத்தை அனுபவிக்கின்றானென்பதை விக்ரர் பிராங்கிள் (Victor Frankle) விபரிக்கின்றார். எது இல்லாவிட்டாலும் தனிமை என்ற சாபக்கேடு ஒரு மனிதனுக்கும் வந்துவிடக்கூடாதென்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பொதுவுண்மை. "தொடர்புகள் - உரையாடல்கள் அற்ற மனிதவாழ்வு பாலைவனத்துக்குச் சமமானது". இது லொனேர்கன் (Lonnergan) என்பவர் தனிமை நோவுக்குள்ளாகிய பலரை உளவியல் ஆற்றுப்படுத்தலுக்கு உட்படுத்தியபோது பெற்றுக்கொண்ட பட்டறிவு. "மனிதன் தனிமையாக இருப்பது நன்றன்று" என்பது வேதநூல் வாக்கு. ஆக, ஒவ்வொரு மனிதனுக்கும் தொடர்பு மிகவும் அவசியமாகின்றது. மனிதன் இயல்பிலேயே சமூகப் பண்புள்ளவன் – தனிமையை வெறுப்பவன் – சக மனிதனின் கூட்டுறவு வாழ்வை எதிர்பார்ப்பவன் – அதில் மகிழ்ச்சியும் கொள்பவன்.

சிலமாதங்களின் முன் யாழ். குடாநாட்டுக்கும் வெளி உலகிற்குமான தொலைத் தொடர்புகள் ஸ்தம்பிதம் அடைந்ததை நாம் அறிவோம். அந்நாட்களில் அனைவரும் அனுபவித்த உளவியல் ரீதியான அங்கலாய்ப்புக்கள், மனவுளைச்சல்கள், விரக்தியுணர்வுகள் எழுத்தில் விபரிக்கமுடியாதவை. மகிழ்ச்சி, துன்பம் போன்ற உணர்வுகளைக் கூட தம்மவர்களுடன் பகிரமுடியாத துன்பம் நிறைந்த நாட்களாக அவை இருந்தன. வெளிநாடுகளில் வாழும் உறவுகளுடன் தொடர்புகொண்டு அனுதின உணவுக்கு ஏதாவது கேட்கலாமென்றால் முடியாதுள்ளதே என்று அங்கலாய்த்த மனிதவுள்ளங் களைப் பார்த்தோம். பரிதவித்தோம்.

உள்ளூர் இடப் பெயர்வுகளின் போது தமது உறவுகளைப் பிரிந்தவர்களின் தவிப்பை எப்படி விபரிப்பது. இன்னும் போக்குவரத்துக் கட்டுப்பாடு, விமான, கப்பல் பயணங்கள் இரத்து, மின்சாரத்தடை, கடிதங்கள் உரியகாலத்தில் கிடைக்காமை போன்றன நம்முள்ளங்களை எத்தனை வலுவாகத்தாக்கு கின்றன.

அவ்வகையில் இம்மலரில் விரிந்திருக்கும் தொடர்பு பற்றிய சிந்தனைகள் தொடர்பு பற்றிய அறிதலுக்கும் ஆக்கபூர்வமான உறவுக்கட்டுமானத்திற்கும் உரம்சேர்ப்பனவாக படைக்கப்பட்டுள்ளன. நல்ல உறவுகளை ஏற்படுத்தி இயல்பு வாழ்வுக்கு அடிகோலுவோம். தனிமை என்னும் இருளில் வாழும் மனிதனைக் காப்பாற்று வோம். (Better Communication – Better Achievement).

தோழமையுள்ள வாழ்த்துக்களுடன். ம. போல் நட்சத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பா? அது என்ன

நபர்களுக்கிடையிலான செய்திப்பரிமாற்ற இடைவினையினை நாம் மனித–மனித தொடர்பாடல் என்கிறோம். வழங்கப்பட்ட செய்தியே பெற்றுக் கொள்ளவும் படுமாயின் அதை வெற்றிபெற்ற தொடர்பாடல் என்கிறோம். வழங்கப்பட்ட செய்தி ஒன்றாகவும் பெறப்பட்டது இன்னுமொன்றாகவும் இருக்குமாயின் அதுவும் தொடர்பாடலே. இருப்பினும் அது பிழைத்த தொடர்பு எனக்கொள்ளப்படும். ஆகக் குறைந்தது தொடர்பாடலுக்கு இரு நபர்களாவது அவசியம் என்பது தெளிவு. செய்தி வழங்குநர், செய்தி பெறுநர், செய்தி, கடத்தும் ஊடகம் என நால்வகை சேர்மங்கள் ஒரு தொடர்பாடலை சாத்தியமாக்குகின்றன.

வாய்மொழியாகவும் அதுதவிர்ந்த செய்கைகள், சமிக்ஞைகள் வழியாகவும் செய்தி கடத்தப்படக்கூடியது. வாய்வழித் தொடர்பைப் போலல்லாது சொற்சாரா (Nonverbal) தொடர்பாடல் மனிதனுக்கு இயல்பானது. ஆயினும் தருணத்தில் அது துல்லியத் தன்மை குறைந்ததாகவும் அமைந்துவிடுகின்றது. சிலவேளைகளில் அது வாய்வழி வழங்கப்பட்ட செய்திக்கு நேர்எதிரான செய்தியைக்கொடுப்பதாகவும் அமைந்து விடுகின்றது. மொழிசாரா தொடர்பாடல் அதனதன் மொழியினாலும் கலாசார சூழ்நிலைகளாலும் ஆட்கொள்ளப்பட்டு பல்வேறுபட்ட அர்த்த வடிவங்களைப்பெறுகின்றது.

உதாரணமாக : தலையை மெதுவாக சற்று இடம் வலமாக திருப்புதல் உடன்பாட்டைக் குறிப்பதாக நாம் கருதுகின்ற வேளையில் மேலை நாடுகளில் அதே செய்கை உடன்பாடின்மையைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றது. (தலை அசைவை உன்னிப்பாகக்கவனிக்கின்றபோது தெரிகின்ற வேறுபாட்டுத் தன்மை அவர்களினால் புறக்கணிக்கப்படுகின்றது)

ஆக மொழிசாரா தொடர்பு செய்திகளை உணர்ச்சிகளையும் சமூகச்சூழல் பின்புலத்தினர்த்தத்தையும் கலந்து கடத்தும் ஒரு முக்கிய ஊடகமாகும். வார்த்தை வழியல்லாமல் மொழிசாரா விதமாக பயன்படுத்தப்படும் பரிவர்த்தனை ஊடகத்தையே மனிதன் அதிகம் பயன்படுத்துகின்றான். சொன்னால்த்தான் செய்தியா, சொல்லாமலே செய்தி கடத்தப்படுகின்றது. செய்தி பரிமாறிக் கொள்வோருக்கு இடையில் உள்ள தூர இடைவெளி (Personal Space) முகபாவனை (Facial Expression)
கண்தொடர்பு (Eye Contact)
உடலசைவுகள் (Body Language)
கை சமிக்ஞைகள் (Hand Gestures)
தொடுகை (Touch)
தொனி ஏற்றஇறக்கம் (Paralanguage) போன்றவை மொழிசாரத் தொடர்பூடகங்கள் எனப்படுகின்றன.

பரிவர்த்தனையில் ஈடுபடுவோரின் உறவுமுறைகளுக்கமைய அவர்களுக்கிடையிலான தூர இடைவெளி அமைந்திருக்கவேண்டும். ஒவ்வா நெருக்கமோ இடைவெளியோ தொடர்பாடலை பிழைக்கச் செய்துவிடலாம். (உ+ம் : அம்மா பிள்ளைக்கிடையில் உள்ள தூர இடைவெளி மேலதிகாரிக்கும் ஊழியருக்குமிடையில் இருக்கமுடியாது)

முகபாவனைகள் உணர்ச்சிகளின் கண்ணாடி எனப்படுகின்றன. இருப்பினும் சமயங்களில் தெளிவற்ற செய்திகளையும் முகபாவனைவழி கடத்தி விடுகிறோம். உற்றுநோக்கலின் நேரஅளவு, கண்ஜாடைகள், விழி அசைவு என்பன செய்திப் பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பார்வை ஒன்றே போதும் எனபலவகை உணர்ச்சிச் செய்திகளை கண்வழி பரிமாறுதல் கண்கூடு.

உடல் அசைவுகளும் அதன் நிலைகளும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது தெரிந்ததே. கை அசைவுகளும், புருவ, இமை, கண் அசைவுகளும் சொல்லிலே கூறுவதை துல்லியமாக்குவதற்கும், இலகுவாக்குவதற்குமாக பயன்படுகின்றன. தொடுகை பல்வகை அர்த்தங்களைத் தாங்கி நிற்கின்றது. (உ+ம் ஒருவர் இன்னொருவரின் தோள்களிலே கையை வைத்தால் தோழமை, ஆதரவு, உறுதுணை என்ற அர்த்தம் பெறலாம். அதே தோளில் கைவைத்தலை வேகமாகவும் உறுதியோடும் இறுக்கமாகவும் செய்தால் "நீ செய்யப்போவதை நிறுத்து" என அர்த்தம் பெறும். தொடுகை சந்தர்ப்பத்திற்கும் இடத்திற்கும் தொடுகின்றவர், தொடப்படுகின்றவருடைய நிலைகளுக்கும் ஏற்றாற்போலும் அர்த்தம் மாறும் தன்மையுடையது.

தொனி ஏற்ற இறக்கம், உச்சரிப்பு அழுத்தம் என்பனவும் தொடர்பாடலில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனைப்பயன்படுத்தி நேர் எதிரான கருத்தைக்கூட பரிவர்த்தனை செய்துவிடமுடியும். உ + ம் "நல்லாப் பாடினான்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொடரையே தொனியில் ஏற்ற இறக்கத்தையும், இழுத்தும் குறுக்கியும் அழுத்தியும் பட்டும்படாமலும் கூறுகின்றபோது நன்றாகப்பாடவில்லை என்ற அர்த்தம் பெறக்கூறமுடியும்.

மௌனம் சாதித்தலும் மொழிசாரா தொடர்பாடலில் ஒருவகையே. மௌனம், சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கிடையிலான கால அளவு என்பனவும் கூட சொல்லாச் செய்திகளாக பரிமாறப்படலாம். மௌனம் சம்மதத்திற்கு மாத்திரமல்ல ஆனால் கட்டாயமாக ஏதோ ஒன்றிற்கு அறிகுறி எனக் கொள்ளுதலே அறிவுடமை.

பொய் கூறுவதற்காகவும் உண்மையும் தாற்பரியத்தையும் கூட்டுவதற்காக அல்லது குறைப்பதற்காகவும் மொழிசாரா தொடர்பூடகங்கள் பயன்படுத்தப்படு கின்றன. வாய்மொழி தொடர்பு போலல்லாது நிச்சயத்தன்மையற்ற பண்பு இதற்குத்துணை போகின்றது, அல்லாமலும் செய்தி கொடுநரோ பெறுநரோ தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கேற்றாற்போல் அர்த்தம் கற்பித்துக் கொள்ளக் கூடுமாகையால் இவ்வழிப் பரிமாற்றம் துல்லியத் தன்மை குறைந்ததே. இருப்பினும் நடைமுறையில் மனித செய்திப்பரிமாற்றத்தில் பெரும் பங்கினைப்பெறுவது இம்மொழிசாரா தொடர்பே.

மொழிசார் தொடர்பு என்னும்போது வார்த்தைகளாக செய்தியை பரிமாறிக் கொள்ளுவதைக் குறிக்கும். இதில் பேசுதல், கேட்டல் என இரு செயற்பாடுகள் நடைபெறுகின்றன. (சரியாகப் பேசாமை, சரியாகக் கேட்காமை கூட மொழிசாரா தொடர்பாடலின் ஒரு வடிவமே) சுயத்தை வெளிப்படுத்துதல் (Self disclosure) உணர்வுகளின் நெருக்கத்திற்குக்காரணமாகின்றது. அதேவேளையில்' சூழல், சந்தர்ப்பம், வாதம், நபர் போன்ற காரணிகள் சுயவெளிப்பாட்டை எதிர்மறையாகவும் ஆக்கிவிடக்கூடும். சொல்லவேண்டியவற்றை சொல்லவேண்டிய தருணத்தில் சொல்லவேண்டிய விதத்தில் சொல்லுதலே உளச்சமநிலையுடன் கூடிய தக்க தொடர்பாடலாகும்.

மனித இருப்பைச் சாத்தியப்படுத்தப்பிறந்த தொடர்பாடல் சமயங்களில் எதிர்மறை முடிவுகளையும் வேண்டாச்சிக்கல்களையும் கூட உண்டு பண்ணி விடுகின்றது. பயனுள்ள தொடர்பாடலுக்குத் தடையாக சில தொடர்பாடல் செயற்பாடுகள் அமைந்துவிடுவதுமுண்டு. அவையாவன:



1. தற்காப்புத் தொடர்பாடல் (Defensive Communication) தான் மனத்தளவில் கூட எவ்விதத்திலும் எள்ளளவும் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக சுயம் அதீத முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவதாகக்கொண்டு மிகைப்படுத்தப் பட்ட கரிசனையுடன் தொடர்பாடலில் ஈடுபடுதலை தற்காப்புத் தொடர்பாடல் என்பர். ('நான் எப்பொழுதும் சரி' என்பது இதன் வெளிப்பாடே)

2. ஆக்ரோஷத் தொடர்பாடல் (Aggressive Communicaion) ஆதிக்கம் செலுத்தும் முறையிலும், அச்சுறுத்தும் தொனியிலும், கேலியாகவும், குற்றம் சுமத்துவதாகவும் அமைந்துள்ள தொடர்பாடல் இவ்வகையினது. மற்றவரை மட்டம் தட்டுவதும் இதில் உள்ளடங்கும். தாம் நினைப்பதை வேறுவழியில் செய்துமுடிக்க வழி தெரியாதோரும் வேறுவழியில் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள அறிந்திருக்காதோரும் இவ்வகைத் தொடர்பாடலை அதிகம் கைக்கொள்ளுகின்றனர்.

3. உள்ளடக்கல் தொடர்பாடல் (Submissive Communicaion) : ஆக்ரோஷத் தொடர்பாடலுக்கு நேர்எதிரானது இவ்வுள்ளடக்கல் தொடர்பாடல். முரண்பாடுகளை, உடன்படாமைகளை தவிர்க்கும் பொருட்டு தம் கருத்தையும் உணர்ச்சிகளையும் விருப்பு வெறுப்புகளை மழுங்கடித்து, சிதைத்து, தன்னுள் அடக்கி தொடர்பு கொள்ளுதல் உள்ளடக்கல் தொடர்பாடல் எனப்படும். முகத்தை முறிக்கக்கூடாது, தன்னைப்பற்றி, தன் ஆற்றலைப்பற்றி தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்திவிடக்கூடாது, உறவில் விரிசல் ஏற்பட்டு விடக்கூடாது என்ற மிகைப்படுத்தப்பட்ட கரிசனையினால் "இல்லை" எனக்கூறுதல் இவர்களுக்கு மிகக்கடினம். இவர்கள் தங்களை அறியாமலேயே அம்மனப்பாங்கில் திருப்திப்பட்டும் கொள்வர்.

4. நோக்கம்சார் திரிபுத் தொடர்பாடல் (Mortivational Distortion) என்ன சொல்லப்பட்டது என்பதற்கல்லாமல் என்ன சொல்லப்படவேண்டும் என ஒருவர் விரும்புகின்றாரோ அது சாய்வாக நின்று கேட்பனவற்றிற்கு அர்த்தம் கொள்ளுதலே நோக்கம் சார் திரிபுத் தொடர்பாகும். செய்தியைப் பெறுநர் தான் கொண்டுள்ள கருத்திற்கமைய பெறுகின்ற செய்தியை அர்த்தம் கற்பித்துக் கொண்டு செயற்படுத்தலில் இது ஏற்படுகின்றது. சொல்லப்பட்டது ஒன்றாக இருக்கின்ற பொழுது பெற்றுக்கொண்டது வேறொன்றாக அமைந்து விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. யோசனைச் சிந்தைத் தொடர்பாடல் (Self Preoccupation) சொல்லப்படுகின்ற விடயத்தை கூர்ந்துகேட்காது தொடர்ந்து தான் சொல்ல வேண்டியவற்றை தன்னுள் ஆயத்தம் செய்தல் சுயயோசனைச்சிந்தைத் தொடர்பாடல் என அழைக்கப்படுகின்றது. கதைத்தல் கேட்டல் என இருவழிப்பாதையாகிய தொடர்பாடல் இங்கே தொடர்பறுந்த நிலையில் இருக்கின்றது. மற்றவர்களைக் கவருவதாக எண்ணிக்கொண்டு நீண்ட உரைகளை (அநேக தடவைகளில் தம்மைப் பற்றியே) மேற்கொள்ளுதல் இவ்வகை சார்ந்தது.

6. உளவிளையாட்டுத் தொடர்பாடல் (Game Playing) : இதை சுற்றி வளைத்துத் தொடர்பாடல் எனக்கூறுதலும் பொருந்தும். ஏலவே தீர்மானிக்கப்பட்ட ஒன்றை நோக்கி முன்னெடுக்கப்படுகின்ற ஒரு சூட்சுமமான உரையாடல் இதுவாகும். ஏமாற்றுத் தந்திரங்கள் இங்கு பிரயோகிக்கப்படுவதாக முற்றுமுழுதாக் கூறிவிட முடியாது. இருப்பினும் திறந்த மனப்பாங்கு இங்கு காணப்படாது. உதாரணமாக நாலுபேருடன் உரையாடலில் ஈடுபட்டிருக்கும் ஒருவர் உணர்ச்சிவாக்கிலே தன்மனைவியை விழித்து; "ஹூம் நான் நினைச்சிணெண்டால் இண்டைக்கே ஒரு மோட்டசயிக்கிளைக் கொணந்து இறக்குவன். என்னப்பா நீங்க என்ன சொல்லுறீங்க.....?

மனைவி: ஓமோம், இவங்களுக்குச் செய்துகாட்டுவோம்.

7. ஏமாற்றுத் தொடர்பாடல் (Collusion) : பொய்யை மெய் என நிருபிக்க நபர்கள் தங்களுக்குள் உடன்பட்டு ஒருமித்து மற்றவர்களுடன் பரிமாறும் தொடர்பு இவ்வகையைச்சேர்ந்தது. நன்கு திட்டமிட்டு உண்மையை மறுத்தல் இங்கு இடம்பெறுகின்றது.

மேலே குறித்த பிறழ்வுத்தொடர்பாடல் வகைகள் நாளாந்தம் நாம் எதிர்கொள்ளுகின்ற தொடர்பாடல் வகையராக்கள் ஆகும். மக்களை மனித மாண்போடுமதித்து இதய சுத்தியுடன் சரியான நோக்கில் நிபந்தனையற்ற விதமாகப்பண்புடன் பரிவர்த்தனை செய்யப்படும் செய்தி மனித உறவினை உறுதி செய்யும். உறுதியான வெளிப்பாட்டுத்தொடர்பாடல் (Assertive Communication Style) தெளிவாகவும் துல்லியமாகவும் செய்திகளை வழங்குதல், நிச்சயத்தன்மையுடன் பேசுதல், வெறும் சொற்செறிவல்லாமல் பொருள் செறிவுடன் பேசுதல், முன்பின் முரணற்ற செய்திகளைப்பரிமாறுதல் ஒரு நல்ல வழங்குநருக்குரிய பண்பு சாரா பரிமாற்றத்தை அவதானித்துக்கிரகித்தலும் அவை தன்னிலே எவ்வித பாதிப்பைச்செலுத்துகின்றன என விழிப்பாக இருந்து உற்றுக்கேட்டலும் ஒரு சிறந்த பெறுநரின் பண்புகளாம்.

தொடர்பூடகங்கள் பெரிதும் வளர்ந்துவிட்டபோதிலும் மனித சாகியம் தொடர்புச் சிக்கலில் உழன்று கொண்டிருக்கின்றது என்றால் தொடர்பூடகங்களைக் கையாளுகின்ற விதத்தில் மனிதன் வளரவில்லை என்ற கசப்புண்மை மறைந்திருக்கின்றது. எனவே முனைப்பாக இருந்து சிறப்பாகப் பகிர்ந்து செழிப்பாக வாழ பொறுப்பாகத் தொடர்பினை விருப்பாகச்சீர்செய்வோம், நலம் பெறுவோம்.

**செ. ஜெயந்தன் அ. ம. தி.**

**உசாத்துணை :**

1. Psychology Applied to Modern life – Adjusted in the 90s – Wayne Weiten / Margaret A. Lloyd, Book / Cole Publishing Company, USA, 1994.
2. Psychology B. Von Haller Gillmer, Harper & Row, Publishers, Newyork, 1970.

**இலங்கையில் 20% மக்கள் மனநோயால் பாதிப்பு**

**இலங்கையின் சனத்தொகையில் 20% ஏதோ ஒரு காரணத்தால் மனநோய்க்கு ஆளாகியிருப்பதாக சுகாதார அமைச்சர் டபிள்யூ. டி. ஜே. செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.**

**அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது :-**
**இலங்கையில் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்குப்போதியளவு வைத்தியர்கள் இல்லாததே நோயாளரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும்.**

**இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு வெளிநாடுகளுக்கு சென்றுள்ள மனநோய் வைத்தியநிபுணர்களை மீண்டும் இலங்கைக்கு வரவழைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.**

நன்றி *உதயன்* - 10 / 06 / 2001.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தொடர்பாடலின் பரிமாணம்
## (Dimension of Political Communication)

அரசியல் தொடர்பாடல் (Political Communication) என்ற எண்ணக்கரு அரசியல் கருத்துக்களை சமூகத்திற்கு எடுத்துச் செல்லும் சாதனமாக விளங்குகின்றது. இன்னொரு விதமாக கூறுவதாயின் அரசியலை சமூகவியல் நோக்குக்குரியதாக அணுகுகின்ற கருதுகோளே அரசியல் தொடர்பாடல் ஆகும். பொதுவாக தொடர்பாடலை பரப்புதல் அல்லது இடம்மாற்றம் செய்தல் என அர்த்தப் படுத்துவதுண்டு. இச்சிறுகட்டுரை அரசியல் தொடர்பாடலின் பரிணாமத்தை நோக்குவதாக உள்ளது.

அரசியல் தொடர்பாடல் என்ற எண்ணக்கருவை Prof. Karl Deutch விவரணப்படுத்தும்போது, *"தேர்தல் சக்திகளின் அரசியல் அதிகாரக் கட்டமைப்பை கட்டியெழுப் புவதற்காக தகவலை தொடர்பாடல் கட்டுமாணத்தின் மூலம் மாற்றிக் கொடுப்பதெனக்"* கூறுகின்றார். இவ்வம்சத்தை G.A.Almond; வெளிப்படுத்தும் போது, *"ஓர் அரசியல் முறைமையின் (Political System) நடத்தையினையும், இன்னோர் அரசியல் நடத்தையின் வேறுபாடுகளையும், அரசியல் மாதிரிக்கு எதிரான அணுகுமுறைகளையும், பரிந்துரைகளையும் புரிந்து கொள்ளுகின்ற சாதனம்"* என்றார்.

மேற்குறிப்பிட்ட அறிஞர்களது கருத்துக்களிலிருந்து ஒரு சமூகத்தை முழுமையாக அரசியல் மயப்படுத்துவதில் அரசியல் தொடர்பாடலுக்கு அதிக பங்குண்டு என்ற முடிவுக்கு வரலாம். அரசியல் தொடர்பாடல் சமூகப் பரிணாமத்தின் அடுக்குகளுக்கு ஏற்ப தகவலை பரிமாற்றுமாயின் அச்சமூகத்திடம் அரசியல் விழிப்புணர்வு இயல்பாகவே வளர்ச்சியடையும். குடும்ப அலகு, கல்வி நிறுவனம், அமுக்கக் குழுக்கள், கட்சிகள், மற்றும் நிறுவனங்கள் ஒரு சமூகத்தை அரசியல் மயப்படுத்துவதில் அமைப்பொழுங்கு சார்ந்தவையாக உள்ளன.

அடுத்து அரசியல் தொடர்பாடலை ஏற்படுத்துகின்ற சாதனங்களை சுருக்கமாக நோக்குவோம்.

பாரம்பரியமாக பத்திரிகை, வானொலி, தொலைகாட்சி, துண்டுப்பிரசுரங்கள், அறிக்கைகள், வெளியீடுகள் என்பன அரசியல் தொடர்பாடலை ஏற்படுத்துகின்ற சாதனங்களாக உள்ளன. தற்காலத்தில் தகவல் தொழில் நுட்பப் புரட்சியினால் தொடர்பாடல் பிரமாண்டமான வளர்ச்சியை அடைந்துவிட்டது. உலகம் கிராமமாக (Global Village) சுருங்கிவிட்டது. இவ்வளர்ச்சிக்கு நிதர்சனமாக இணையம் (Internet) விளங்குகிறது. செய்திகளை உள்ளடக்கிய தொடர்பாடல் வேகமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. அவற்றில் பொருளாதார, இராணுவ, நோக்கு நிலையோடு ஒப்பிடுகின்ற போது அரசியல் தொடர்பாடல் பலவீனமாகவே உள்ளது. வெளிப்படையாக நோக்கும்போது அரசியல் தொடர்பாடல் பலவீனமாகக் காணப்பட்டாலும் மறைமுகமாக உளவுபார்த்தல், யுத்தச் செய்திகளை உடனுக்குடன் வெளிப்படுத்துதல், யுத்த தளவாடங்களின் வலுவை கண்டறிதல் எனப்பல மாற்றங்கள் அரசியல் தொடர்பாடலில் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக சோவியத் யூனியன் வீழ்ச்சிக்கும், ஈராக் மீதான படையெடுப்புக்கும் தகவல் தொழில் நுட்ப சாதனங்களின் பரப்புகையே முக்கிய காரணமாகும். அத்தகவல் சாதனங்களை அமுக்கியவர்கள் அமெரிக்கர்களும், மேற்கு உலகத்தவருமே.

அரசியல் தொடர்பாடலின் நவீன தகவல் சாதனங்களின் (வெகுஜன தொடர்பு சாதனங்களின்) வளர்ச்சியில் மேற்கு உலகமே முன்னணி வகிக்கிறது. உலகில் அமெரிக்கர்களே இணையத்தை அதிகம் பயன்படுத்துபவர்களாக காணப்படுகின்றனர். எனவே அவர்களால் முன்வைக்கப்படுபவையே உலகத்தால் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

மூன்றாம் உலக நாடுகளின் அரசியல் தொடர்பாடல் முறைமை சார்ந்தது ஒன்றல்ல. சாதி, மத, மொழி, இன, அலகுகள் சார்ந்ததாகவே விளங்குகிறது. மேலும் தேர்தல் மட்டுமே மூன்றாம் உலக சமூகங்களையும் அரசியல் எண்ணக்கருக்களையும் தொடர்புபடுத்துகின்ற அம்சமாக உள்ளது. ஒவ்வொரு சமூகமும் வாக்குகளை பதிவு செய்வதோடு தமது அரசியல் பணி முடிந்துவிடுவதாக கருதுகின்றது. காரணம் சமூகங்கள் மட்டத்தில் வன்முறை, ஆக்கிரமிப்பு என்பன அரசியல் தொடர்பாடலுக் குட்பட்டு அரசியல் மயப்படுத்தலை நிராகரிக்க வைக்கின்றன.

எனவே உலக நாடுகளில் அரசியல் தொடர்பாடலுக்கான பரிமாணம் அருகி வருகிறது. குறிப்பாக மேற்கு நாடுகளைவிட மூன்றாம் உலகமே மிகதாழ்நிலை அரசியல் தொடர்பாடலை கொண்டுள்ளன. அவை பெருமளவுக்கு மேற்கின் அரசியல் எண்ணக்கருக்களையே பிரதிபலிக்கின்றன. G.A.Almond குறிப்பிடுவது போல் அல்லாமல் மாதிரிகளை அப்படியே எதிர்க்கருத்துக்கு இடம்கொடுக்காது பின்பற்று கின்றன. அல்லது பின்பற்ற அமுக்கப்படுகின்றன. இதனால் அரசியல் தொடர்பாடல் ஒரு தெளிவான கற்கையாக நோக்கமுடியாத நிலையை அடைந்துவிட்டது என்ற முடிவுக்கு வரலாம்.


Notes :

1. Dr. S.K.S. Nathan, *Political Communication and the Electoral Process*, University of Jaffna Publications, 1992
2. G.A.Almond & G.B.Powell, *Comparative Politics: A Developmental Approach*, Vakil & Sons Private Ltd., India,1966.
3. Akslay Joshi: *Information Technology and Security: An Update Strategic Analysis* Vol. XXIII, No: 2, IDSA Publication, May 1999.
4. ASIA WEEK, May 20. 2001





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மாவின் சத்தம் - ஒரு தற்கொலைக் கொடூரம்

யாழ். போதனா வைத்தியசாலை புனித வேளாங்கண்ணி சிற்றாலய ஆன்மகுருவாகப் பணிபுரியும் என் அனுபவத்திலே ஏறக்குறைய ஐம்பது பேரளவில் தமக்குத்தாமே எரியூட்டிய தற்கொலையாளிகளைச் சந்தித்திருக்கிறேன். மிக மோசமாக துன்புறுகின்ற நோயாளர்களில் இவர்களும் முதலிடம் பெறுகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள்.

இவர்களோடு பேசும்போது இவர்களின் பலரின் அப்போதைய திடீர் முடிவு ஆத்திரத்தில், கோபத்தில் எடுக்கப்பட்டது என்பதை கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. இவர்களில் அநேகர் உண்மையாக உளமாற சாவதற்கு அல்லது தம் உயிரை மாய்ப்பதற்கு இச்செயலைச் செய்ததாகத் தெரியவில்லை. எனினும், இவர்களில் பலர் மிகப் பரிதாபகரமாக அவஸ்தைப்பட்டு, துடிதுடித்து இறந்து போவதாகவும், ஏனையோர் மிக நீண்ட தொடர் வேதனையின் பின் உயிர்தப்புவதாகவும் வைத்தியசாலைப் பதிவேடுகள் நிரூபிக்கின்றன.

இப்படியாக, இவர்களின் சோகமான கதைகளுக்குச் செவிமடுக்கின்ற வேளையில் ஒருபக்கம் எந்த அளவுக்கு இவர்கள் வாழுகின்ற சமுதாயத்தில் சமூகத்தின் பார்வையும், மனப்பான்மையும் கொடூரமானது என்பதையும், மறுபக்கம் எந்த அளவிற்கு இவர்கள் சமுதாயத்தின் சவால்களுக்கும், சந்திக்கும் பிரச்சனைகளுக்கும் முகம் கொடுத்து வாழத்தெரியாத 'அப்பாவிகள்' எனவும் எண்ணத் தோன்றுகிறது.

இதுபற்றிய மேலதிக கருத்துக்களும், அனுபவங்களும் ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் உள்ளத்தை உருக்கிய ஒரு சந்திப்பையே இங்கு தர விரும்புகிறேன்.

2001 வைகாசி மாதம் இறுதிப்பகுதியில் கணவனை இழந்த ஓர் இளம் பெண் தனக்குத்தானே எரியூட்டிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். கணவனை இழந்தபோது அவளின் தலைப்பிள்ளையின் வயது; உதரத்தில் அவனை உற்பவித்திருந்த அந்தச் சில நாட்களே!..... இப்போது அந்த ஒரே மகனுக்கு வயது 11.

கணவனை இழந்தவளுக்கு இருக்கிற துன்பதுயரங்கள், தொல்லைகள் போதாதென்று, புறத்தே வெளியிலிருந்து எத்தனையோ சவால்கள்!... அத்தனையையும் எதிர்கொள்ள முடியாதவளாக வாழ்ந்துவரும் நாட்களில்





திடீரென ஒருநாள் தன்னைச் சுற்றியிருந்து வேதனைப்படுத்துவோரை பயப்படுத்தும் நோக்கத்துடன் தன்னைத்தானே எரியூட்ட முயற்சிப்பது போல செயற்பட்ட வேளையில் நெருப்புப் பற்றியெரிந்த நிலையில் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறாள்.

*"இத்தனைபேர் என்னிடம் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள் என்று இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. எல்லோரிடமிருந்தும் நிறைவான அன்பைப் பெற்றேன்"* என்று கூறியவள் தனது அன்புக் குழந்தையை தனக்கென்றிருந்த ஒரே செல்வத்தைப் பார்க்க மறுத்தாள். காரணம், தனது கோலத்தைக் கண்டு அவளுக்கென்றிருந்த அந்த ஒரே செல்வம் பதைபதைத்துவிடுவான் என்பதால்தான். இருப்பினும், தாயின் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டு போனதினால் தாயாரின் நிலைமையை படிப்படியாக எடுத்துச் சொல்லி, ஆற்றுப்படுத்தி, அவன் தாயாரைப் பார்க்க கூட்டிச் செல்லப்பட்டபோது நடந்த சந்திப்பும், சம்பாசனையும்தான் உள்ளத்தை உருக்கும் காட்சியாக இருந்தது.

ஒரே பிள்ளையல்லவா. தந்தையை இழந்த பிள்ளை. தாய்ப்பாசத்தோடு தனியன்பு ஊட்டி வளர்க்கப்பட்டவன். மகன், தாயைக் கண்டதும் கலங்கினான். கதறினான். கண்ணீர் வடித்தான். சற்று நேரம் கண்ணீரே கதை பேசின!...!...!...

*"என்ர செல்லம் எப்படி இருக்கிறீங்க?...!..."* வேதனையைக் காட்டிக்கொள்ளாமல் அவள் மெல்ல வாய்திறந்தாள்

☹ *"நல்லாயிருக்கிறன்... அ...ம்...மா..."* கண்ணீர் மல்கப் பதில்சொன்னான்.

*"ஏன் குஞ்சு அழுறீங்க?... அழாத என்ர செல்லம்... என்ன சாப்பிட்டீங்க செல்லம்?"*

☹ *"சோறு"*

*"யாரண தீத்திவிட்டது?"*

☹ *"ஒருத்தரும் இல்ல. நீங்க எப்ப வீட்ட வருவீங்க அம்மா?"*

*"என்ர செல்லம். அம்மா கெதியா வந்திடுவன் அண... அழக்கூடாது. என!... 'ரொய்லட்' எல்லாம் யாரு கழுவிவிடுறது?..."*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப நான்தானம்மா கழுவுறது"

"என்னணை... என்ர குஞ்சு... மாமா, அன்ரி எல்லா உன்ன நல்லா பாப்பாங்க. கவலைப்படாத செல்லம். குளிச்சீங்களா? யாரு குளிப்பாட்டினது?..."

"நாந்தானம்மா. எப்ப... நீங்க... வீட்ட.... வருவீங்க..."

"மெல்லிய சுடுதண்ணியில முழுகவேணும். காதப் பொத்திக்கிண்டு முழுகவேணும். ரெண்டு கிழமைக்கு ஒருக்கா முழுகவேணும் எண்டு அன்ரியிற்ற சொல்லுங்க குஞ்சு!..."

"ஓமம்மா. நீங்க எப்ப வீட்ட வருவீங்க?..."

"கெதியா அம்மா வீட்ட வருவன்!... என்ர செல்லம் பள்ளிக்கூடம் போனீங்களா?..."

"ஓமம்மா... இண்டைக்கு நான் வாசிப்பில முதலாம் இடம். எப்ப நீங்க வீட்ட வருவீங்க?...."

"என்ர செல்லம்!.... குஞ்சு... நீ நல்லாயிருப்பா!.. நீ கெட்டிக்காரனா வருவா!.... அம்மாவ நினைப்பியா?"

"ஓம்மா!.... நீங்க எப்ப வீட்ட வருவீங்க அம்மா!...."

"அம்மா இரண்டொரு நாளில வருவன்!.... என்ர செல்லம் என்னணை... நல்லாப் படிக்கணும். கெட்டிக்காரனா வரணும். பள்ளிக்கூடத்தில அம்மாவக் கேட்கயில்லையா?...!..."

"ரீச்சமாரும், வகுப்பு ஆசிரியரும் 'அம்மாவுக்குச் சுகம்வரும் நீ நல்லாப் படிக்கணும். நாங்க நல்லா மன்றாடுவம்' எண்டு சொன்னாங்க அம்மா!...." எப்ப வீட்ட வருவீங்க!...?...

"அம்மா வருவன் செல்லம்!... படுக்கும் போது 'பாப்பா' புடிக்கிறதில்லையா?..."

"இல்லையம்மா!... எப்ப வீட்ட வருவீங்க?..."

"அம்மா கெதியா வருவன்!... என்ர செல்லத்துக்கு அம்மா எதில முத்தம் தாறது!..."

விம்மி விம்மி அழுதான்.

"பாதர்... என்னுடைய வேதனை தாங்க ஏலாம சாகவேணும் எண்டு காலையில சொன்னன். ஆனா, என்ர செல்லத்தோட கதச்ச பிறகு உயிர்தப்ப வேணும் போல இருக்கு!... செத்தாலும் உயிர்க்க வேணும் போல இருக்கு!... தப்புவேனா பாதர்!... பாதர்!... பாதர்!..."

சுற்றியிருந்த நோயாளர்கள், பார்க்க வந்தவர்களின் கண்கள் குளமாகின. பதினொரு வயதுச் சிறுவன், ஆனால், அவன் பால்குடி மாறாத பாலகனைப் போன்ற நிலையில்தான் வளர்க்கப்பட்டிருக்கிறான்!... உண்ண, உடுத்த, உடைமாற்ற, தலை சீவ, கழுவ, தோய்க்க, அன்புசெய்ய, அரவணைக்க, ஆரத்தழுவ என்று எல்லாமே அவனுக்கு அவள்தான் - அவளுக்கும் அவன்தான்.

"நீங்க எப்பம்மா வீட்ட வருவீங்க?..." என்பவனுடைய ஏக்கத்திற்கு "அம்மா கெதியா வீட்ட வந்திடுவன்!..." என்ற எதிர்நோக்கிற்குப் பதில் எதிர்மறையில்க்கிடைத்தது. சுமார் மூன்று கிழமையின் பின் வீட்டிற்கு வந்தாள் அவள், உயிர் பிரிந்த உடலுடன்!...

"எல்லாமே எனக்கு என்ர செல்ல மகன்தான்" என்றவளுக்கு ஏனிப்படியாயிற்று? என்று அவளைமட்டும் கேட்காமல் இவளைச் சுற்றியுள்ள சமூகத்திடமும் கேட்கவேண்டிய கேள்வி!...

இப்படியான முடிவை எடுக்க இத்தாயை தூண்டியது என்ன? இதற்கு யார்(கள்) காரணம்? யாது(கள்) காரணி? அவளை மட்டுமல்லாது, இவனைச் சுற்றியுள்ளவர்களும் பதில்காணவேண்டிய வினா!...

இதனால், இத்தாய் சாதித்தது தான் என்ன? சாதிக்காமல் இருக்கலாம்!... போதித்தது என்ன ஆனால் .....

"எப்ப அம்மா வீட்ட வருவீங்க?....!...." என்பவனுடைய ஏக்கம் தீருமா? எப்போது தீரும்? எப்படித் தீரும்?

**செ. அன்புராசா, அ. ம. தி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்றத்தின் ஏணி தொடர்பாடல்

மனிதன் ஒரு சமூகப்பிராணி. ஆயினும் ஒரு குழந்தை பிறக்கும்போது சமூகப்பண்புகளுடன் பிறப்பதில்லை. மற்றவர்களோடு தொடர்ந்து தொடர்பு கொள்வதன் மூலமே நற்பண்புகளைப் பெற்றுக்கொள்ளுகின்றது. குழந்தையின் படிப்படியான வளர்ச்சியில் நற்பண்புகள் வளர்க்கப்பட வேண்டுமாயின் சுமுகமான தொடர்பாடல் அவசியமாகும். சமூகத் தொடர்பில் முதிர்ச்சி ஏற்படும்போது தனிநலன்களில் மாற்றம், புதிய நணபர்களைத்தேடுதல், புதிய சூழ்நிலைகளில் மற்றவர் குணங்களைப் புரிந்து கொள்ளுதல், சவால்களை எதிர்கொள்ளுதல் ஆகிய திறன்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. தொடர்புகள் பல வகையில் ஏற்படுத்தப்படலாம்.

1. பெற்றோர் - பிள்ளைகள் தொடர்பு.
2. ஆசிரியர் - மாணவர் தொடர்பு.
3. சகபாடிகள் தொடர்பு.
4. பெரியவர்கள் தொடர்பு
5. கற்றவர்கள் தொடர்பு. இவர்களுடனான தொடர்புகள் சமூக விருத்திக்கும் தனியாள் ஆளுமை விருத்திக்கும் அவசியமானதாகும்.

முதலில் தொடர்புகள் ஏற்படுத்தப்படும் இடம் குடும்பம் ஆகும். குடும்பத்தில் பெற்றோர் - பிள்ளைகள் தொடர்பு சீரானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் அமைதல் அவசியம். பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் அத்தகைய தொடர்புகள் ஏற்படாதுவிட்டால் பிள்ளைகளுக்கு மனமுறிவு ஏற்பட ஏதுவாகின்றது. பிள்ளைகள் பற்றிய அக்கறை ஒவ்வொரு பெற்றோரிடமும் இருத்தல் அவசியம். பிள்ளைகள் முதலில் பெற்றோரிடத்தில் அன்பை எதிர்பார்க்கின்றனர். அவர்களிடம் இருந்து நல்ல கணிப்பும் அன்பும் பிள்ளைகளுக்குக்கிடைக்குமாயின் அவர்களுக்கிடையிலான உறவு ஆரோக்கியமானதாக அமையும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றும் போது ஆலோசனைகளை வழிகாட்டல்களை மேற்கொள்ளும்போது, அவர்களுக்கு பாராட்டுகள் கணிப்புகள் வழங்கும்போது பெற்றோர்-பிள்ளைகள் தொடர்பு அதிகரிக்கின்றது.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது". சிறுவயதில் நற்பண்புகளை பழகாது விட்டால் வளர்ந்தும் கூட அவற்றைப்பெறமுடியாது. ஆதலால் பிள்ளைகள் சிறுவதிலேயே கல்வி, ஒழுக்கம், சமூக விழுமியங்களைக் கடைப்பிடிப்பதில் ஆர்வமும் அக்கறையும் கொள்ளவேண்டுமாயின் பெற்றோர்-பிள்ளைகள் தொடர்பு சீரானதாக அமைதல் அவசியம்.



இவர்களுக்கிடையே இத்தகைய சீரான தொடர்புகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள்:

- தாய், தந்தையரிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, அன்பு, சகிப்புத்தன்மை காணப்படும்போது
- பெற்றார் சமூகத்தில் நேர்மனப்பாங்குடன் வாழும்போது
- பெற்றார் பிள்ளைகளுக்கு நல்ல நண்பர்களாக இருந்து ஆலோசனைகள் வழங்கும்போது
- பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்கும் போது
- பிள்ளைகளின் கல்வி, கணிப்பு, அன்பு, பாதுகாப்பு போன்ற பல்வேறு தேவைகளை நிறைவேற்றும்போது, பெற்றார் மட்டில் பிள்ளைகளுக்கு மதிப்பு ஏற்படுவதுடன் அவர்களுக்கிடையிலான தொடர்புகளும் நல்ல முறையில் அமையும்.

ஆசிரியர்-மாணவர் தொடர்பானது மாணவனிடம் தலைமைத்துவப்பண்பு, ஆளுமை விருத்தி, நல்லொழுக்கம், கற்றல் மேம்பாடு ஆகியவற்றை வளர்ப்பதற்கு ஏதுவாகின்றது. ஆசிரியர் மாணவ சமுதாயத்தின் வழிகாட்டிகள். சமூக விழுமியங்களைப் பேணல், நல்லொழுக்கம், கற்றல், தொழில் போன்ற பல்வேறு விடயங்களுக்கு மாணவன் வழிகாட்டப்படுதல் வேண்டும். ஆசிரியரின் வழிகாட்டுதல்களை மாணவன் ஏற்று, அதன்படி செயற்படுவதற்கு ஆசிரியர்-மாணவர் தொடர்பு சிறப்பானதாக அமைய வேண்டும். குருகுலக்கல்வி முறையில் இத்தொடர்பு நல்லமுறையில் பேணப்பட்டுவந்தது. ஒவ்வொரு மாணவனையும் ஆசிரியர் இனங்கண்டு அவனது முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக விளங்கினார். அத்தகைய உறவுமுறை இன்றும் தொடர வேண்டும்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் இவர்களுக்கிடையிலான உறவு அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது

- மாணவர் பிரச்சினைகளை ஆசிரியர் இனங்கண்டு பரிகாரம் தேடும்போது
- மாணவர்களின் திறமைகளை ஆசிரியர் இனங்கண்டு வளர்க்கும்போது
- மாணவர்களுக்கு பாராட்டு, கணிப்பு வழங்கும்போது
- மாணவனை மையமாகக் கொண்ட கற்பித்தல் நடைபெறும்போது
- ஆசிரியர் மாணவனுக்கு நல்ல வழிகாட்டியாக இருக்கும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவன் பிழைவிடும்போது அதனைத்திருத்தி நல்வழிப்படுத்தும் போது
- ஆசிரியர் முகமலர்ச்சி, ஒழுக்கம், நற்பண்புகளுடன் செயற்படும்போது

ஆசிரியரை மாணவன் மதிக்கும்போது ஆசிரியர்-மாணவன் இடைத் தொடர்பு நன்றாக அமையும்

அடுத்து சகபாடிகளின் தொடர்பு தனியாளின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்து விடுகிறது. நண்பர்களைத்தெரிவுசெய்யும்போது நல்லொழுக்கம் உடையவராகவும், நல்ல வழிகாட்டக்கூடியவராகவும் தெரிவு செய்வது இன்றியமையாதது. நீண்டகால நற்செயல்களின் பின்னணியிலேயே சமூகத்தில் நற்பெரைப்பெறமுடியும். ஆனால் கெட்டபெயர் ஒரு நொடிப் பொழுதில் கிடைத்துவிடும். பல ஆண்டுக்காலமாக பேணிக்காத்த நற்பெயரை, நல்லொழுக்கத்தை கெட்ட சகவாசத்தால் நொடிப்பொழுதில் இழந்து விடலாமா? "ஆழமறிந்து காலைவிடு" என்பது பழமொழி. இது அநுபவத்தின் வெளிப்பாடு. ஆதலால் நண்பர்களை ஆராயாமல் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது தவறு.

பெரியவர்கள் வாழ்வின் பழுத்த அநுபவசாலிகள். வாழ்க்கையின் மேடுபள்ளங்கள், நெளிவு சுழிவுகள் யாவும் நன்கறிந்தவர்கள். அவர்களுடன் கொள்ளும் தொடர்பானது சமுதாயத்தின் ஏற்றத்திற்கும், சுபீட்சமான வாழ்வுக்கும் வழிகாட்டும். பெரியவர்களிடம் இருந்து பெறப்படும் ஆலோசனைகள், வழிகாட்டுதல்கள் வாழ்க்கையின் இலட்சியத்தை வென்றெடுப்பதற்கு வழிவகுக்கும்.

"கற்றவர்கள் முகத்திரண்டு கண்ணுடையார்" அவர்களின் தொடர்பானது வாழ்க்கையின் முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்கின்றது.' "பூவொடு சேர்ந்த நாரும் மணம் பெறும்" என்பார்கள். கற்றவர்களோடு சேர்தலால் கல்வியறிவு, நல்லொழுக்கம் இயல்பாகவே பற்றிக்கொள்ளும் என்பது கற்றோர் கருத்தாகும்.

ஆதலால் குழந்தைகள், மாணவர்கள், இளைஞர்கள் என பல தரப்பட்டோரும் வாழ்க்கைக்கு வேண்டிய நல்லனவற்றைப்பெற்று வாழவேண்டும். அதற்கு இடைத்தொடர்புகள் அவசியமாகின்றன.

**திருமதி நொ. யூ. தர்மரட்ணம்**
யா/புனித சாள்ஸ். ம. வி.



# வதந்தி – ஒரு சமூகத்தொடர்பாடல் வடிவம்

## (**Rumour** – A form of Social Communication)

**க. அன்ரன் டயஸ்**
விரிவுரையாளர், மெய்யியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

மக்களிடையே தகவல்களைப் பரப்பும் ஒரு மூலமாக வதந்தி பயன்படுகிறது. அறியாமை மிக்கவர்களாலும் அறிவுமிக்கவர்களாலும் கூடபரப்பப்படும் வதந்திகள் பல்வேறு தவறான வழிநடத்தல்களுக்கு இட்டுச் செல்கின்றன. இவை சாதாரண விடயங்களைத் தீமை நிரம்பிய விடயங்களாகப்பெருப்பித்து விடுகின்றன. எவ்வாறாயினும் ஏதோவொரு வகையில் தனிமனிதர்களில் தொடங்கி சமூகங்கள் வரை தொடர்பாடலை ஏற்படுத்தும் மூலமாக அமைவதனால், வதந்தியை சமூகத்தொடர்பாடலின் ஒரு வடிவமென விபரிப்பதில் தவறில்லை.

வதந்தி உருவாக்கப்பட்டு, பரப்பப்படும் நோக்கங்களின் அடிப்படையில் அணுகும்போது சிலவேளைகளில் அதுவொரு பிரச்சார தந்திரமாக (Stratergy of Propaganda) அமைவதையும் காணலாம். இவை மக்களிடம் அச்சத்தையும் பதகளிப்பையும் ஏற்படுத்துகின்றன. அதேவேளை நகைச்சுவை நோக்கிலும் வதந்திகள் பரப்பப்படுவதுண்டு. *"டில்லியில் குரங்கு மனிதனின் அட்டகாசம்"* அண்மையில் வெளிவந்த பரபரப்பான பத்திரிகைச் செய்தியிது. பாதிக்கப்பட்டவர்கள் உண்மையென்கின்றனர். பொலிசார் வதந்தி என்கின்றனர். உளவியலாளர்களோ அச்சத்தின் வெளிப்பாடு என்கின்றனர். *"விடுதலைப்புலிகள் ஹெலிகளை கொள்வனவு செய்துள்ளனர்"* என்றவொரு செய்தி வெளியாகியது. இராணுவச் செய்திப் பகுப்பாய்வாளர்கள் இதனைத் தந்திரோபாய ரீதியில் உருவாக்கி விடப்பட்ட வதந்தி என்கின்றனர்.

வதந்தி என்பதனை வரைவிலக்கண ரீதியாக அணுகும் போது, James A. Drever என்பார் Dictionary of Psychology என்பதில் "குறித்தவொரு சம்பவம் அல்லது நிகழ்வு பற்றி சமூகத்தில் உலவும் உண்மை காணப்படாத கதையே வதந்தி" என்கிறார். Oxford English Dictionary; "நிச்சயமாய் உண்மையாய் இருக்காதவொன்றைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதனால் பரவும் தகவல் வதந்தியாகும்" என்கிறது. Postman, Allport ஆகிய உளவியலறிஞர்களின் அபிப்பிராயப்படி ஆதாரங்கள் முன்னிறுத்தப்படாது (வாயினால்) நபருக்கு நபர் கடத்தப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைக்கான குறிப்பிட்டதொரு எடுப்பு வதந்தி ஆகும். எனவே சுருக்கமாக 'உண்மை காணப்படாது நபருக்கு நபர் பரப்பப்படும் தகவல் வதந்தியாகு'மெனலாம்.

வதந்தியின் பிரதான குணவியல்பு வதந்தியைப் பரப்பும் தனிநபர் அதன் உண்மை பற்றியும், வாய்ப்பு பற்றியும் ஆராய்வதற்கு எத்தகைய முயற்சியையும் மேற்கொள்ளாமையாகும். ஒருவர் தனக்கு, பிறர் மூலம் அல்லது பிற ஊடகங்களின் மூலம் கிடைத்த தகவல்களில் (அவை தவறானவையாக இருப்பினும்கூட) தனக்கு உடன்பாடானவற்றையும், விருப்பமானவற்றையும், கிரகிப்பு ஆற்றலுக்கு உட்பட்டவைகளையும் மீளமீளக் கூறுவதன் மூலம் பரப்புகின்றார். வதந்தியைப் பரப்புபவர் அதன் உண்மை பற்றி அக்கறை கொள்வதில்லை. பொதுவாக வதந்திகள் புனைகதைகளாகவேயுள்ளன.

வதந்தி பொதுவாக ஆரம்பத்தகவல் கிடைக்குமிடத்திலிருந்து வாய் வழியூடாகவே (Mouth to Ear) பரப்பப்படுகிறது. ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கும் அவரில் இருந்து பிறிதொருவருக்கும் என்றவாறு இது தொடர்கையில் வதந்தி தோற்றும் இயல்பு கொண்டதெனலாம். அதேவேளை இவ்வாறு வதந்தி பரப்பப்படும்போது, அதன் ஆரம்ப வடிவத்திற்கும் முடிவில் பெற்றுக்கொண்ட வடிவத்திற்கும் வேறுபாடு காணப்படுவது இயல்பே. சிலவேளைகளில் அது முற்றிலும் புதிய செய்தியாக அமைந்துவிடுவதுமுண்டு. ஒரு வதந்தி எவ்வாறு வளர்கிறது என்பதை விளக்க சுவாரசியமான கதையொன்று கூறப்படுவதுண்டு.

வைக்கோல் போரருகே (haystock) மின்மினிப் பூச்சியொன்று மின்னிக் கொண்டிருப்பதை வழிப்போக்கனொருவன் கண்டான். தான், கண்டது நெருப்பாக இருக்கவேண்டுமெனக் கருதி அதனைப் பிறிதொரு நபருக்குக் கூறினான். இத்தகவலைப் பெற்ற நபர் வைக்கோல் போரருகே நெருப்பெரிகிறதென வழிப்போக்கன் கண்டதாக பிறிதொரு நபருக்குத் தகவல் கொடுத்தார். இது பற்றிய அடுத்த தகவல் வைக்கோல் போர் தீப்பிடித்து விட்டதாகவும் அருகிலுள்ள பண்ணை வீட்டிற்கு ஆபத்துள்ளதாகவும் அமைந்தது. இறுதியில் பண்ணை வீடு எரிந்து விட்டதாகவும் அங்கு தங்கியிருந்தவர்கள் மூச்சுத் திணறியதாகவும் தகவல் அமைந்தது. நெருப்புப்போல் தெரிந்த மின்மினிப் பூச்சி பற்றி வழிப்போக்கனது சிறிய தகவலே இவ்வளவு பெரிதாய் வளர்ந்தது.

பொதுவாக மனிதர்கள் பதற்றநிலையில் உள்ளபோதும் (Anxiety) போர்ச்சூழலிலும் (War situation) வதந்திகள் உருவாவதுடன்,



இச்சூழ்நிலைகளில் ஆச்சரியப்படத்தக்க வகையிலும், விரைவாகவும் பரவுகிறது. ஏனெனில் அனைவரும் அச்சமுடையவர்களாகவும் பதற்றமுடையவர்களாகவும் உள்ளபோது அனைத்தையும் இலகுவாக நம்பிவிடுவர். போர்ச்சூழ்நிலைகளில் ஈகோ வயப்பட்ட தனிநபர்கள் தமது கீழ்த்தரமான ஆர்வங்களை அடைந்து கொள்வதற்காக வதந்திகளைப் பரப்புவர். உண்மை புலப்படும் வரை வதந்தி செல்வாக்கு மிக்கதாக அமையும். உண்மை வெளிப்படும்போது வதந்திக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் தவிர்க்கப்படும்.

கூட்டு நடத்தையை (Collective Behaviour) வதந்திகள் உருவாக்குகின்றன. சில குழந்தைகள் கடத்தப்பட்டுள்ளனர், ஒரு குழுவின் பிரதான அங்கத்தவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார் அல்லது கொல்லப்பட்டுள்ளார் போன்ற வதந்திகள் சனநெரிசலை உருவாக்குவதுடன், குழுக்கள் உருவாகி, கூட்டு நடத்தை இடம்பெறவும், வன்முறைகள் இடம்பெறவும் ஏதுவாகின்றன. அத்துடன் இவை ஆர்ப்பாட்டங்களுக்கும் எதிர்ப்புக்கூட்டங்களுக்கும் காரணமாகின்றன. மேலும் இவை உண்மைச்செய்தியை விளக்க வேண்டிய சூழ்நிலையையும் உருவாக்குகின்றன.

வதந்தி பலமான உளவியலடிப்படையைக் கொண்டுள்ளதாக உளவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். அவற்றை ஆராயின் அவ்வடிப்படைகளே வதந்தி பரப்பப்படுவதற்கான காரணங்களாகவும் நிபந்தனைகளாகவும் அமைகின்றன. அவை வதந்திகள் எவ்வாறு பரவுகின்றன என்பதையும் காட்டுகின்றன.

எமது செவிகளுக்கெட்டும் வதந்திகள் சில தனிநபர்களின் பாலியல் நடத்தை (Sexual Behaviour) தொடர்பானவையாயுள்ளது. குறிப்பாகப் பெண்கள் கூடும்போது யாரோ ஒருவரது பாலியல் நடத்தை பற்றிப்பேசிக் கொள்கிறார்கள். 'குறித்த நபரொருவர் நள்ளிரவில் தான் வீடுதிரும்புகிறாராம்' 'அந்தப் பையன் குறிப்பிட்ட பெண்மீது கண் வைத்திருக்கிறாராம்'; இவ்வகையில் இவை தொடரக்கூடும். பாலியல் பிரச்சனைகள், பாலியல் ஊழல்கள் தொடர்பான வதந்திகளை வாசிப்பதிலும், கேட்பதிலும், பரப்புவதிலும் மக்கள் மகிழ்வடைவதுடன் அதனை விரும்பவும் செய்கிறார்கள். இது ஏன் நிகழ்கிறது? உளவியல் நோக்கில், தனிநபர்களின் ஒடுக்கப்பட்ட பாலியல் வேட்கைகளும், விருப்புகளும் இத்தகைய கதைகளைத் தோற்றுவிக்கின்றன எனக் கூறப்படுகிறது. ஒருவரது பாலியல் வேட்கைகள் தடைப்படும்போது அல்லது திருப்தி செய்யப்படாதபோது அவற்றை அந்நபர் ஒடுக்குகிறார். ஆனால் அவை அழிக்கப்படுவதில்லை. மாறாக நனவிலி உளத்தில் (Unconscious Mind)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து கொண்டு ஏதோவொரு வடிவில் வெளிப்பட முனைந்து கொண்டிருக்கின்றன. தனிநபரொருவர் தவறான அல்லது உண்மையான பிறிதொரு பாலியல் விடயத்தைக் கேட்கும்போது, தனது நனவிலி வேட்கைகள் விருப்பங்களால் தூண்டப்படுவதுடன், வதந்தியாக தோற்றம் பெறுகிறது. ஆய்வுகளின் பிரகாரம் இத்தகைய கீழ்த்தரமான கதைகளின் அத்திவாரம் பாலியல் இயல்பூக்கத்தின் திருப்தியிலேயே உளது. சில வேளைகளில் தனிநபரொருவரின் பாலியல் உறவுக்கான விருப்பு எதிர்ப்பாலாரால் நிராகரிக்கப்படும்போது, அல்லது அதனை ஊக்குவிக்க எதிர்ப்பாலார் தவறும்போது வதந்தி மூலம் திருப்தி அடையப்படுகிறது. அல்லது தனது ஆர்வத்தை நிராகரித்த தனிநபரைப் பழிவாங்கும் நோக்கில் வதந்தி உருவாகிறது.

வதந்தியின் தோற்றத்திற்கு பிறிதொரு . காரணி எறியப்படுதலாகும் (Projection). ஒருநபர் எது நடக்கவேண்டுமெனத் தான் விரும்புகிறாரோ அதனைப் பிறிதொரு நபரின் நடத்தையில் எறியப்படுத்தி விடுகிறார். நனவிலி ரீதியாக இடம்பெறும் இச்செயன்முறையும் ஒரு உளவியற் காரணியாக அமைகிறது. எனவே வதந்தி என்பது ஒருவரது எறியப்படுத்தப்பட்ட எண்ணமெனவும் கூறலாம்.

தனிநபரின் பாலியல் விருப்புக்களைத் திருப்திப்படுத்துவதற்காக மட்டுமன்றி, அவரது பழிவாங்கும் உணர்வைத் (revenge) திருப்திப்படுத்துவதற்காகவும் வதந்திகள் உருவாகின்றன. நேரடியாக பிறரை வெற்றிகொள்ள முடியாதவர்கள், பிறரது நற்பெயரை. புகழைக் கெடுக்கவும், பழித்துக்கூறவும் அதன்மூலம் தமது எதிரியைக் கீழ்நிலைப்படுத்தவும் (Degrade) வதந்தியைப் பயன்படுத்துகின்றனர். எனவே வதந்தி ஒருவரது பழிவாங்கும் உணர்வின் வெளிப்பாடாயமைகிறது. சில உண்மையான அல்லது தவறான நேர்வுகளை எமது வெறுப்பின் (hatred) அடிப்படையில் இலகுவாக நம்பிவிடுகிறோம். எமது வெறுப்பினால் அவை குறித்து நாம் திருப்திப்படுவது மட்டுமல்ல, அதன் தவறான இயல்பை மேலும் பலமானதாக்கி பிறருக்குக் கடத்துகிறோம். உதாரணமாக நாம் வெறுக்கும் ஒருவர் பற்றி ஒரு தகவல் கிடைக்கும்போது அதனை மேலும் பெரிதுபடுத்தி பிறருக்குப் பரப்புவதை அன்றாட வாழ்க்கையில் காணலாம். எனவே "வெறுப்பு" வதந்தியின் தோற்றத்திற்கும் பரம்பலுக்கும் அடிப்படையாகிறது எனலாம்.

ஆபத்துக் காலங்களிலும் கஷ்டமான சூழ்நிலைகளிலும் மக்கள் கவலையுடையவர்களாகவும் அச்சமுடையவர்களாகவும் பதகளிப்புடைய வர்களாகவுமிருப்பர். இந்நிலையில் சிந்திக்கும் ஆற்றலும், பிரதிபலிப்பும் பலவீனமடையும், மனவெழுச்சி அதிகரிக்கும். இத்தகைய நிலையில்



அவர்கள் எவ்வாலோசனையுமின்றி, ஆராய்வுமின்றி எதனையும் ஏற்றுக்கொள்ளும் நிலையிலிருப்பர். இத்தகைய நிலை வதந்திகள் தோற்றம் பெறவும், பரவவும் வாய்ப்பாகிறது. யுத்த நிலையிலுள்ள நாடுகளில் யுத்தம் தொடர்பான வதந்திகள் மிக இலகுவாகவும் விரைவாகவும் பரவும். இதற்குக் காரணம் மக்கள் அச்ச நிலையிலும் பதகளிப்பு நிலையிலும் இருத்தலாகும். எனவே அச்சத்தினதும் பதகளிப்பினதும் வெளிப்பாடாகவும் வதந்தி தோற்றம் பெற்றுப் பரவுகிறது.

தமது எதிர்பார்ப்புகளோடும் விருப்புகளோடும் (Expectation & Desire) இணைந்துசெல்லும் விடயங்களின் பக்கம் மக்கள் திரும்புவது ஆச்சரியத்துக்குரியதல்ல. இத்தகைய அம்சங்களைக் கொண்ட வதந்திகளை நம்புவதும் பரப்புவதும் இயல்பானதே. அரசாங்கத்தை எதிர்க்குமொருவர், அது கவிழவேண்டுமென எதிர்பார்க்கும் ஒருவர் அரசுக்கும் ஏனைய கட்சிக்குமிடையிலான பிணக்குகளைப்பெரிதுபடுத்தி அரசு கவிழ்ந்துவிட்டதென வதந்தியைப்பரப்பக்கூடும். இதே மனநிலையுடன் உள்ள ஒருவர் இதனை இலகுவில் நம்பிவிடவும் கூடும்.

தனிநபரொருவர் மூலம் பிறிதொரு நபருக்குப்பரப்பப்படும் வதந்தி அவரிடமிருந்து பிறிதொருவருக்கு என்றவகையில் பரவுகிறது (வாய் மூலம்) எனக்கூறப்படுகின்றபோதும், இம்முறை வரையறைக்குட் பட்டதாகும். மிகப்பரந்த அளவில் வதந்தியைப்பரப்புவதற்கு இவ்வூடகம் பயன்படுவதில்லை. இத்தகைய நோக்கங்களுக்கு சிறப்பான ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக அரசியல்சார் ஆர்வங்களையும், முடிவுகளையும் அடைவதற்காகவே இத்தகைய ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மக்களிடையே பரஸ்பர உரையாடலை (Mutual talk) நிகழ்த்துவதன் மூலம் வதந்திகள் பரப்பப்படலாமென நம்பப்படுகிறது. வரையறுக்கப்பட்ட பரப்புக்குள் வதந்தியைப் பரப்புவதில் இம்முறை வெற்றிபெறும். அனுமதி பெற்ற, அனுமதிபெறா வானொலி நிலையங்களினாலும் வதந்திகள் பரப்பப்படுகின்றன. அரசியல்சார் வதந்திகளைப் பரப்புவதில் இவ்வூடகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. போர்க்காலங்களில் பல தவறான செய்திகள் அனுமதிபெற்ற வானொலி நிலையங்களூடாக ஒலிபரப்பப்படுகின்றன. மறுதரப்புடன் இணைந்து செல்லாத, பகைமையுணர்வு கொண்டுள்ள தனிநபர்கள் இத்தகைய செய்திகளை இலகுவாக ஏற்றுக்கொள்வர். உதாரணமாக 'குறிப்பிட்டதொரு தாக்குதலில் 800 புலிகள் கொல்லப்பட்டனர்' எனும் வானொலிச்செய்தியை, புலிகள் மீது வெறுப்புணர்வு மிக்கவர்கள் இலகுவில் ஏற்றுக்கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சார்ந்த வதந்திகளைப் பரப்புவதில் அனுமதியற்ற வானொலி நிலையங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஜேர்மன் நாசிகள் பிரித்தானியாவின் B.B.C வானொலி நிலையத்திற்கு மாற்றாக அதே அலை வரிசையில் போலியான B.B.C வானொலி நிலையத்தை உருவாக்கி பிரித்தானியாவின் கௌரவத்தைப்பாதிக்கும் வகையில் அறிக்கைகளை வெளியிட்டமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். பொதுவாக வாசிப்புப்பழக்கமுள்ள பொதுமக்கள் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கும் அனைத்தையும் அதன் முகப்பெறுமதியுடன் ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையவர்கள். சிலவேளைகளில் அரசியற் கட்சிகளின் ஆர்வங்களை ஊக்குவிக்கும் செய்திகள் உருவாக்கப்பட்டு பிரசுரிக்கப்படுகின்றன. பத்திரிகைச் செய்தியை அவ்வாறே ஏற்கும் மனப்பான்மை வதந்திகள் பரவுவதற்கு ஏதுவாகிறது. பெரும்பாலும் அரசியற்கட்சி சார்ந்த பத்திரிகைகள் இவ்வுத்தியைக்கையாளுகின்றன.

தொகுத்துநோக்கின் சமூகத்தொடர்பாடல் வடிவமாகவும் பிரச்சாரத் தந்திரமாகவும் அமையும் வதந்தி, உண்மை காணப்படாது நபருக்கு நபர் பரப்பப்படும் தகவலாகும். இது பலமானதொரு உளவியலடிப்படையைக் கொண்டுள்ளதென்பது உளவியலாளர்களின் அபிப்பிராயமாகும். வதந்தி நனவிலியுளச்செயற்பாடாகும் என்பது பிராய்டைச்சார்ந்தவர்களது விளக்கமாகும். மேலும் பாலியல் விருப்பு, வெறுப்பு, பழிவாங்கும் உணர்வு, பதகளிப்பு, அச்சம், எரிச்சலூட்டுதல் போன்றவற்றின் வெளிப்பாடாக அமைகிறது. மேலும் இவை வாய் மூலம் பரப்பப்படுகிறதெனக்கூறப்படுகின்றபோதும், பரஸ்பர உரையாடல், அனுமதிபெற்ற, பெறாத வானொலி நிலையங்கள் பத்திரிகைகள் என்பவற்றின் மூலமும் பரப்பப்படுகிறன.

************************************


References :

1. Vatsyayan Dr., *Social Psychology*, Kedarnath - Ramnath, Delhi, 1993.

2. Kuppuswamy B., *Elements of Social Psychology* (7th Ed.), Konark Publishers Pvt. Ltd.,1996.




## உரைக்கிளி

*"எங்க புள்ள தம்பி வேலையால வந்திட்டானோ?" "இல்ல அம்மா கொஞ்சம் பொறுங்கோ, லைன் கிடைக்கிறதே கஷ்டமாயிருக்கு, இப்ப ரிங் போகுது, ஆனா ஒருத்தரும் எடுக்கிறாங்களில்ல" "போனமுறையும் சின்னவளின்ர விசயத்தைக் கதைக்கேக்க லைன் கட்டாப் போயிட்டுது..."*

மனிதனுக்கும் தொடர்பிற்கும் இடையே தவிர்க்கமுடியாத ஒரு தொடர்பு உண்டு. ஒன்றுடன் இன்னுமொன்று தொடர்புபடுத்தப்படும்போது மாத்திரம்தான் "இருப்பு" சாத்தியமாகின்றது. இல்லையேல் இல்லாமையே மிஞ்சும். தொடர்பற்ற நிலையில் இருப்பதை "சூன்யம்" என்போம். இச்சூன்யம் கடவுளாக படைப்போடு தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டது. நாம், நேரம் இடப்பெயர்வு போன்ற பருப்பொருள்களெல்லாம் தொடர்பினடிப்படையிலே தோற்றமை ஐன்ஸ்டீனின் சார்புக்கொள்கை ஞாபகத்தில் வருகின்றது.

பரிமாற்றமின்றி மனித வாழ்க்கை சாத்தியப்படாது. தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சி உலகை ஒரு சிறு கிராமமாக மாற்றிவிட்டமை ஏதோ உண்மைதான். ஆனால் குடும்பங்களிலும் சமூகங்களிலும் தொடர்பாடல் சிக்கலினால் பல்வேறான சச்சரவுகள், சமூக பிறழ்வு நடத்தைகள் அதிகரித்துள்ளன. மனிதன் இயந்திரங்களின் மீது தங்கியிருப்பதால் மனித உறவுகளில் விரிசல்கள் தவிர்க்கப்பட முடியாதவையாகிவிட்டன என்பது ஒரு கருத்து. போலி உலகிலே மனமற்ற மனிதர்களைவிட இதயமில்லா இயந்திரங்களை நம்புதல் பரவாயில்லை என்பது இன்னுமொரு கருத்து. ஆனால் மனங்களின் தொடர்பினால் மாத்திரமே மானுடம் வாழக்கூடும்.

*"எங்கையண்ணை போறியள்?" "இல்ல இந்தா உதுவரைதான்"* அடுத்தவரின் அலுவலை அறிந்துவிடவேண்டும் என்ற ஆர்வம் முதலாமவரிடம். தான் செய்யப்போவது மற்றவருக்குத் தெரிந்துவிடக் கூடாது என்ற ஆதங்கம் அடுத்தவரிடம். *"என்ன ஆளை இந்தப் பக்கம் கனநாளாக் காணேல்ல"* என்ற முறைப்பாடு. *"ஓம் தெரியாதே தலைக்குமேல வேலை"* என காரண விளக்கம். எமது கலாசாரத்தில் இவைபோன்ற உரையாடல்கள் தமக்கேயுரிய இறுக்கமான அர்த்தத்தைச் சுமந்து வராவிட்டாலும் தொடர்பொன்றை உரையாடல் ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கான தொடக்க வசனங்களாகவே அநேகமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை 'தந்திர வசனங்கள்' என ஒருசிலர் கருத்துக்கூறுகின்றனர். அதை நாம் மறந்தாலும் எம் உரையாடல்களில் சுற்றிவளைத்துக்கூறுவதையும் பூடகமாகக் கதைப்பதையும் தவிர்த்தால் ஒரு வேளை எம் உறவுகள் ஆரோக்கியம் பெறும். ஆனாலும் சில தருணங்களில் சில விடயங்கள் வாழைப்பழத்தில் ஊசியேற்றுதல் போன்றும் கூறப்படவேண்டும் என்பதில் உளவியலாளரும் உடன்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சற்ற தொடர்பு - சொல்லாத செய்தி

றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் C.M.F
B.A. (Phil) Dip. in Counselling(Kent)

ஒரு மனிதன் தனது நாளாந்த வாழ்வில் வார்த்தைகளில் வெளிப்படுத்துவதைவிட உடல் வெளிப்பாடுகளைத்தான் அதிகமாக தொடர்புக்கு பயன்படுத்துகிறான் என்று பல உளவியலாளர்கள் கூறுகிறார்கள்.

ஒன்று - மனிதன் பதினைந்து விழுக்காடு வார்த்தைகளால் வெளிப்படுத்துகிறான். எண்பத்தைந்து வீதம் உடல் அசைவுகளால் தன்னை தொடர்புபடுத்திக்கொள்கிறான் என்றும்.

இரண்டு - முப்பது வீதம் வார்த்தைகளால் வெளிப்படுத்துகிறான் என்றும் எழுபது விழுக்காடு உடல் அசைவுகளால் வெளிப்படுத்துகிறான் என்ற கருத்தும் ஒரே செய்தியைத்தான் எமக்கு தருகின்றன.

ஆக மனிதன் வார்த்தைகளை விட உடல் அசைவுகளால்தான் அதிகமாக தன்னை வெளிப்படுத்தி தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கிறான். சிலவேளைகளில் உடல் அசைவுகளில் அவன் வெளிப்படுத்த முடியாமல் தயங்குவதில் கூட அர்த்தம் இருக்கிறது என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஒருவர் இன்னொருவருடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது திடீரென வார்த்தைகள் நின்றுவிடும் அதன்பின் சில சமயம் நீண்ட அமைதியை கையாளுகின்றார். அமைதியைக் கையாளுகின்ற முறையில் ஆற்றுப்படுத்துபவரோ / மற்றவரோ தெளிவாக இருக்கவேண்டும். பல சமயங்களில் கேட்டுக்கொண்டிருப்பவர் அமைதியைக்கண்டு பயப்படுவர். தானும் அமைதியாக இருப்பதற்கு பயப்படுவார். தன்னிடம் பேசிக்கொண்டிருப்பவருடைய அமைதியைக்கண்டு பயப்படுவார். இப்படி அமைதியாக ஒன்றும் செய்யாமல் / சொல்லாமல் இருந்தால் அதற்கு அர்த்தம் என்ன? ஆகவே ஆற்றுப்படுத்துனரோ / மற்றவரோ அந்த அமைதியை மாற்றுவதற்காக தானே ஏதாவது சொல்லத்தொடங்குவார். இது நேர்முக உறவில் மட்டுமல்ல எந்தச்சந்திப்பிலும் இந்த அனுபவம் ஏற்படலாம். ஆக ஆற்றுப்படுத்துனரோ / மற்றவரோ அமைதியை பொறுத்தமட்டில் தெளிவான ஒரு கருத்தைக்கொண்டிருக்காவிட்டால் உறவுகளில் பல சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆகவே அமைதியும் ஒருவித செய்தியை தருகின்றது என்று ஆழ்ந்த அறிவு கொண்டிருத்தல் அவசியம், இத்தகைய ஆழ்ந்த அறிவானது அமைதியிலிருந்து சில செய்திகளை நமக்கு தரும் என்ற நம்பிக்கையை உருவாக்க உதவுகின்றது. மேலும் நேர்முக நுட்பங்களிலே உடல் வழியாக (Body Language) தொடர்புகளை வெளிப்படுத்துவது அதிகமாகும். ஆகவே நாம் மற்றவரின் உடல்வழி செயற்பாட்டை மிகக்கவனமாக கவனிக்க வேண்டியது மிக இன்றியமையாதது.

உ+ம் பல செயற்பாடுகளுடன் உள்ள ஒரு நண்பனிடம் என்னுடன் நாளைக்கு சுற்றுலா செல்ல வருகிறாயா என்று கேட்டால், அவன் மனநிலை இரு துருவங்களில் இருந்தால், ஆம் / இல்லை என்று பதில் சொல்ல கடினமாக இருக்கும். அந்த வேளையில் அவனது முகத்தையும் உடலையும் பார்த்து அவரைப்புரிந்து கொள்ளவேண்டும். இவருடைய விருப்பம் ஆழ்மனதில் இருந்து வருகிறதா அல்லது நண்பனை சமாளிக்க வேண்டும் என்பதற்காக வருகின்ற பதிலா என்று மற்றவர் உணர்ந்து கொண்டு செயற்பட்டால் உறவும் மனநிலையும் அமைதியாக தொடர்பினை தொடரலாம்.

பல சமயம் நான் மற்றவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர்களின் மனநிலைகள் மாறிக்கொண்டுபோகும். அவர்களது பேச்சு ஒன்றாகவும், முகபாவனை, உடலசைவுகள் வேறொரு செய்தியை தருவதாகவும் என்னால் உணர்ந்து கொள்ளமுடியும். அவ்வேளையில் கூடுதலாக அவர்களது பேச்சற்ற தொடர்புகளை இனம்கண்டு சுட்டிக்காட்டி மேலும் சகசமாக தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வசதியாக அமைகின்றது.

ஒருவர் உரைநிகழ்த்திக்கொண்டிருக்கும்போது, அவரது உரை கவர்ச்சியாக இல்லாமல் இருந்தால், பல மௌனமொழியால் உடலசைவுகளால் எமது விருப்பின்மையை வெளிப்படுத்துவது வழக்கம். உ+ம் தலையை தடவுவது / நெட்டி முறிப்பது / கொட்டாவி விடுதல் / தூங்குதல் / பராக்கு பார்த்தல் / அருகிலுள்ளவருடன் உரையாடுவது போன்ற செயல்கள் எம்மை தூரம்போக வைக்கிறன. ஒருமுறை ஒரு பெரிய மண்டபத்தில் ஒருவர் உரையாற்றிக் கொண்டிருந்தவேளை பின்புற வரிசையில் உள்ளவர் ஓர் எழுது பலகையில் (KISS) என்று எழுதி தூக்கி காண்பித்தார். உரை நிகழ்த்துபவர் இதன் அர்த்தத்தை புரிந்தபடியால் உடனே நிறுத்திவிட்டார். (Keep it short stupid)
இவ்வாறாக என் ஆற்றுப்படுத்தல் அனுபவத்தில் பல நபர்கள் வெளியடையாளங்கள் மூலமாகத்தான் எனக்கு செய்திகளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகிறார்கள். இவற்றை இனம் கண்டு அவர்களுடன் எனது தொடர்பை - உரையாடலை மேலும் இலகுவாக்க கூடியதாக இருக்கின்றது.

ஒருநாள் ஒருவர் என் முன்நிலையில் வந்தவுடன் வார்த்தைகள் ஒன்றும் சொல்லாமல் ,அமைதியாக சிரித்துவிட்டு (உரத்த சிரிப்பு கவலையான மனதை காட்டுகிறது) அழ ஆரம்பித்துவிட்டார். சிறிது நேரத்திற்கு பின்பு முகத்தை அவராகவே மேலே எழுப்பி என்னை நோக்கிய வண்ணமாக உரையாட ஆரம்பித்தார். உளத்தாங்கல் பல வார்த்தைகளில் வரமறுத்து சிரிப்பாகவும் கண்ணீராகவும் மாறி கலைகுறைய உரையாடல் சுமூகமாக சென்று பல தாக்கம் கொண்ட பாதைகளை சரிப்படுத்த உதவாது. ஆக நாம் ஒவ்வொருவரும் எமது உள்ளார்ந்த தாக்கங்களை உடல் வழிமொழியினால் விரைவாக வெளிக்கொண்டு வருகிறோம். யாரும் இனம் கண்டு கொள்ளுகிறீர்களா?

இனம் கண்டு புரிந்து கொள்ள ஒரு சில உடல்வழிமொழி செயற்பாடுகள்

- தொடர்ந்து சிரித்தவண்ணம் பேசுதல்.
- தலையை கீழே தொங்கவிட்டுப் பேசுதல்
- முகட்டை பார்த்தவண்ணம் பேசுதல்
- மூன்றாம் நபரை பார்த்து மற்றவருடன் பேசுதல்
- கை பிசைதல்
- ஆடைகளை சரிப்படுத்துதல்
- இமை புருவங்களை மேலெழுப்புதல்
- வாயை / சொண்டை அசைத்தல் ஒருவித பதற்றம் நடுக்கம்
- கன்னத்தில் கைவைத்துக் கொண்டிருத்தல்
- முகமாற்றம் - வார்த்தைகளுக்கு ஏற்றவாறு (உ+ம் களவு / பொய் சந்தேகம் / தவறான பேச்சு கூறும்போது)

ஆகவே எமது உண்மையான தொடர்பை ஆழமாக ஏற்படுத்திக்கொள்ள எம்முடன் தொடர்புகொள்ளும் நபரை மிகவும் அவதானமாக அவரின் பேச்சுக்கு செவி கொடுப்பதோடு மிக அவதானமாக அவரது உடல் தரும் செய்தியையும் புரிந்து அவருடன் உரையாடினால் உணர்வு கலந்த உறவின் தொடர்பை உறுதிப்படுத்தலாம். ஆகவே இனி எம்முடன் உரையாடும் ஒவ்வொருவரினது உடல் அசைவுகள் தரும் பேச்சற்ற மொழியை பார்த்து உணர்ந்து தொடர்புகளை விரிவுபடுத்த முன்வருவோம்.



# புலனிழந்தோரும் தொடர்புலகில் வெற்றியாளர்களே!

[illegible]

Mrs . A. C. Pathmapalan, Principal B. A.
General Teachers Trained
Dip. in the Edu. of the Visually Handicapped, U. K.
Nuffield School for the Deaf and the Blind,Jaf.

## முன்னுரை

விழிப்புலன் செவிப்புலன் இழந்தவர்கள், மற்றைய அங்கங்களை இழந்தவர்கள், மனநிலை பாதிப்படைந்தவர்கள், சித்தசுவாதீனமற்றவர்கள் இப்படி பல குறைபாடு உடையவர்களை சமுதாயத்திலே நாம் காணக் கூடியதாக இருக்கிறது.

## யாரிவர்கள்

விழிப்புலன் இழந்தவர்களையும் செவிப்புலனிழந்தவர்களையும் மற்றைய குறைபாடு உள்ளவர்களின் வரிசையில் வைக்கமுடியாது. செவியினால் கேட்டு கிரகிக்க முடியாத நிலையில் உள்ளவர்கள் செவிப்புலனிழந்தவர்கள். அதேபோல் கண்களால் பார்த்து கிரகிக்கும் நரம்பு பாதிக்கப்பட்டவர்கள் விழிப்புலனிழந்தவர்கள். ஒலியை, ஒளியை கிரகிக்கும் நரம்புச் செயற்பாடு அற்றவர்களாக இருக்கிறார்களே தவிர, மற்ற எல்லா விதத்திலும் இவர்கள் சாதாரணமானவர்களே!

## சமூகத்தில் இவர்கள் இடம்

இவர்களைப் பார்த்த மாத்திரத்தில் ஒருவரின் இதயத்தில் தோன்றும் உணர்வுகளே அவர் தனது வாழ்வில் கொடுக்கும் இடமாக அமைகிறது. முக்கியமாக விழிப்புலன் அற்ற ஒருவரை சந்தித்தால் எமக்கு ஓர் இரக்க உணர்வே உண்டாகிறது. கண்ணற்றவர்களுக்கு "கண்ணாக" செயற்பட விரும்புகிறோம். அதாவது அவர் பயணம் செய்யவேண்டிய இடங்களுக்கு அவரைக்கைபிடித்து அல்லது வாகனத்தில் அழைத்து செல்கிறோம். சகல பொருட்களையும் நாமாக வாங்கிக் கொடுத்து உதவுகிறோம். அப்பிள்ளையின் பெற்றோரும், விழிப்புலன் இழந்த பிள்ளைக்கு இருக்குமிடத்தில் உணவூட்டி விடுதல், ஆடைகளை தவைத்தல், அலங்கரித்து விடுதல், குளிப்பாட்டல் ஆகியவற்றை தாமே முன்னின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறார்கள். அப்படியே இரக்கத்தின் அடிப்படையில் பல உதவிகளையும் செய்கிறார்கள். ஆகவே பெற்றோரும் மற்றோரும், விழிப்புலன் இல்லை என்ற குறைபாடு இல்லாதபடிக்கு அப்பிள்ளையின் "விழியாக" செயற்படுகின்றனர். இப்படியாக அதிகப்படியான அக்கறை காட்டினால் அது நாம் இரக்கம் காட்டி எமது மனதை சமாதானப்படுத்துவதாக அமையுமே தவிர, விழிப்புலன் இழந்த ஒருவர் சமுதாயத்திலே தன்னம்பிக்கை உள்ள திடசங்கற்பம் உடையவராக, தனது காலில் தானே நின்று தனது சுயதேவையை பூர்த்தி செய்பவராக இருக்கவோ மாற்றவோ முடியாதபடி செய்கிறது. செவிப்புலன் அற்ற மாணவரையும் வீதிவழியே சத்தங்களை கிரகிக்க முடியாதபடியால் வாகனங்களில் அடிபட்டுவிடும் என்று பெற்றோரோ மற்றோரோ நினைத்து அழைத்து செல்வர். கடை வீதிகளுக்கு தாமே அழைத்து சென்று பொருட்களை வாங்கி கொடுப்பர். இப்படியான தன்னம்பிக்கையை தளர வைக்கும் சில உதவிகளும் இரக்க அடிப்படையில் உண்டாகும் செயற்பாடுகளும் சமுதாயம் இவர்களுக்கு தம்மை அறியாமலே இழைக்கும் மாபெரும் தீங்காகும்.

## சமூகத்தில் இவர்களுக்கு கொடுக்கவேண்டிய இடம்

ஒருபுலன் மட்டும் தொழிற்படாத இவர்கள் மற்ற எவரையும் போல் சாதாரண பிரஜைகளே. கல்வி கற்க, தேவ பக்தியிலே வளர, கலைகளைக்கற்க, அதை இரசிக்க, சமூகத்தில் மற்றவர்களுடன் இணைந்து செயலாற்ற இப்படியாக சகல துறைகளும் இவர்கள் சக்திக்கு உட்பட்டதே. ஒரு புலன் தொழிற்படாதபடியால், உலகைப்பார்ப்பதற்கோ அல்லது உலகிலே உண்டாகும் ஒலிகளை உள்வாங்கவோ முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால் மற்ற சகல அம்சங்களிலும் இவர்கள் சாதாரண மனிதர்களே. எந்த ஒரு சாதாரண மனிதனைப்போலவும் இவர்களுக்கு இயங்க முடியும், சமுதாயத்திலே முன்னேற முடியும்.

இந்த உண்மையை இக்குறைபாடு உடையவர்களுக்கு விளக்கவைப்பதும், அதற்குரிய பயிற்சிகளைக்கொடுப்பதும், அதற்கேற்ற உபகரணங்களை உபயோகிக்க கற்றுக் கொடுப்பதுமே எமது பாடசாலைகளும் எமது சமுதாயமும் செய்ய வேண்டிய கடமையாகும். இவர்களை பரிதாபத்துக்குரியவர்களாகவும், சிறு குழந்தைகளைப் போல் பராமரிப்பதும் மிகவும் தவறானதாகும். சமுதாயம் இப்படியாக இவர்களை நடத்தினால் இவர்கள் தன்னம்பிக்கையற்ற, எப்போதும் மற்றோரிலும் பெற்றோரிலும் தங்கியிருப்பவர்களாகவுமே இருப்பார்கள். அது மாத்திரமல்ல, பெற்றோருக்கும் மற்றோருக்கும் வாழ்நாள் முழுவதும் பாரமாகவே இருப்பார்கள். ஆகவே



தன்னம்பிக்கை உள்ள, தமது சொந்த வேலைகளை தாமே செய்யும் ஆற்றல் உள்ளவர்களாக, பிறரிலே சார்ந்திருக்கும் எண்ணம் அற்றவர்களாக இவர்களை ஆக்குவதே பாடசாலையினதும், சமூகத்தினதும் முக்கிய பணியாகும்.

## இவர்களின் தொடர்பு ஊடகம் யாவை?

இவர்களுக்கு சமூகத்தோடு தொடர்பு ஏற்படுத்துவதும் எமது கடமையாகும். இத்தொடர்பை எவ்வகையில் உருவாக்கி சாதாரண மக்களுடன் இவர்களை இணைந்து செயற்பட வைக்கலாம் என்பதே எமது பணிக்கான கேள்வியாகும்.

விழிப்புலன் இழந்தவர்களுக்கு பாடசாலைகளில் இருமுறைகள் கடைப்பிடிக்கப் படுகின்றன.

1. உதட்டுவாசிப்பு பேச்சுப்பயிற்சி

   (இவர்கள் கேள்விச் சக்திக்கு ஏற்றபடி இவர்களை சாதாரண பிரஜைகள் போல் பேசவைப்பது). நமது பாடசாலை 1998ம் ஆண்டு விளையாட்டுப் போட்டியில் செவிப்புலன் இழந்த மாணவருக்கு பேச்சுப் பயிற்சி கொடுத்து விளையாட்டுப் போட்டிச் சத்தியப் பிரமாணத்தை ஒலிபெருக்கியில் வாய்மொழி மூலம் பேச வைத்திருந்ததை குறிப்பிடக்கூடிய உதாரணம்.

2. சைகைமொழி கற்பித்தல்

   செவிப்புலன் மிக அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் தம் உணர்ச்சிகளை பரிமாற தேவைகளை வெளிப்படுத்த சைகைமொழி கற்பிக்கப்படுகிறது.

ஆகவே சாதாரண சமூகத்துடன் தொடர்பு கொள்ள உதட்டு வாசிப்பு, பேச்சுப் பயிற்சி ஆகியவையும் செவிப்புலன் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் கருத்துப் பரிமாறலுக்காக சைகைமொழியும் உதவுகின்றன. அதேசமயம் விழிப்புலன் இழந்தவர்கள் எவ்வித தடையுமின்றி சாதாரண சமுதாயத்துடன் தொடர்பு, ஐக்கியம் வைக்கக் மாத்திரமின்றி அதற்குரிய சகல வசதிகளும் உடையவர்களாக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முக்கியமாக (Braille) பிறெயில் எனப்படும் பிரத்தியேக எழுத்து முறையை கற்றுக்கொண்டால் இவர்கள் சாதாரண சமுதாயத்துடன் எழுத்து, வாசிப்பு, பேச்சு ஆகிய தொடர்புகளை வைக்க முடியும். அதோடு வெள்ளைப்பிரம்பின் உதவியுடன் போக்குவரத்து, கடை வீதி என்பன போன்ற இடங்களுக்கு போய்வர முடியும். தமது உணவு உடைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுக்க, போக்குவரத்து செய்ய, சில கலாசாலையில் உயர்கல்வி கற்க வசதியை பயிற்சிகள் இவர்களுக்குப் பாடசாலையில் கற்பிக்கப்படுகிறன. வளர்ந்த நாடுகளில் இவர்கள் மிக உன்னத ஸ்தானங்களை வகிப்பதும் குறிப்பிடத்தக்கது. (இங்கிலாந்தில் விழிப்புலன் இழந்தவர் பாராளுமன்ற உறுப்பினராக உள்ளார்)

### சமுதாயம் இவர்களுடன் எவ்வாறான தொடர்பு வைத்துள்ளது

முதலில் குறிப்பிட்டபடி இவர்கள் இரக்கத்துக்குரியவர்கள், அல்லது பரா உதவிக்குரியவர்கள், அல்லது சிறு குழந்தைகள் போல் பராமரிக்கப்பட வேண்டியவர்கள் என்பதே சமுதாயத்தினரில் பெரும்பான்மையானவரின் கருத்தாக இருக்கிறது. இது பிழையான கருத்தாகும்.

### சமூகத்தின் கடமை

தேவன் மனிதரைப் படைக்கும்போது எவ்வாறு படைத்தாரோ, அதாவது பேசவும், பார்க்கவும், எல்லாவித ஆற்றல் உள்ளவர்களாகவுமே படைத்தார். ஆகவே அவர்களை தேவன் படைக்கும்போது மனிதர் இருந்த நிலைக்கு எம்மால் முடிந்த அளவுக்கு கொண்டு வருவது சமுதாயத்தின் கடமை. தற்போதைய அரசியல் பிரச்சனைகளினால் ஏற்பட்ட பாதிப்புக்களில் மிகவும் அதிகமான பாதிப்பு குண்டுவீச்சு, "ஷெல்" போன்ற தாக்குதல்களினால் அதிகமானவர்கள் விழிப்புலன் செவிப்புலன் இழந்தவர்கள் ஆக்கப்பட்டனர். இப்படியாக சிலர் பிறப்பிலும் பலர் தற்போதைய போர் சூழ்நிலைகளினாலும் விழிப்புலன் செவிப்புலன் இழந்தவர்களாக காணப்படும்போது மக்கள் விழிப்பாக இருந்து செய்ய வேண்டிய பணிகளாவன.

1. இவர்களை விசேட பாடசாலைகளுக்கு வழிநடத்துவது.
2. செவிப்புலன் இழந்தவர்களுடன் சாதாரண மக்கள் உதட்டு அசைவில் பேச்சு தொடர்பு கொள்வது.
3. விழிப்புலன் இழந்தவர்களுக்கு தன்னம்பிக்கை கொடுத்து இவர்கள் கல்வியில் உயர்நிலைக்கு வழிவகுத்துக்கொடுத்தல்.
4. சமுதாயத்தின் ஒரு அங்கமான இவர்களை ஏற்று சமூக நிகழ்ச்சிகளில் இவர்களுக்கு சாதாரண மக்கள்போல் உரிமை கொடுத்தல்.

............................



## கருத்துக் குவியல் - 87

**தொடர்பு யுகமான இன்று நவீன தொடர்பு சாதனங்கள் மனித - மனித உறவினை வளர்க்கின்றன.**

இன்று மனித உறவினை வளர்ப்பதில் நவீன தொடர்பு சாதனங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன. அநேகமாக தொடர்பு சாதனங்கள் அதிலும் நவீன தொடர்பு சாதனங்கள் பொதுவான தகவல்களை ஒரு நாட்டுக்குள்ளேயும் அந்நாட்டுக்கு வெளியேயும் உலகம் முழுவதும் காவிச்செல்லும் கருவியாக காணப்படுகின்றன. இந்த வகையில் மனித - மனித உறவினை வளர்ப்பதில் நவீன தொடர்பு சாதனங்கள் பெரும் பங்களிப்பு நல்கின்றன.

கடிதங்கள் மூலம் உறவுகளை உருவாக்குவது காலம் கடந்த ஒன்று. கடிதங்கள் மூலம் பேனா நண்பர்களைத்தேடிக்கொள்வதும் நீண்டகால செயல்பாங்கு (Long term process). இவற்றை எல்லாம் தேவிக்கொண்டு இன்றைய நவீன யுகத்தில் ஈ-மெயில் (E-mail) கடித தகவல்களை பரிமாறுவதாகவும் உடனுக்குடன் உறவுகளை உருவாக்குவதில் முனைப்பான தொடர்பு சாதனமாகவும் விளங்குகின்றது.

அமெரிக்க அனர்த்தம், குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட பூகம்பப் பேரழிவுகளை எடுத்து நோக்குவோம். குஜராத் சோகத்திற்கு நிவாரணமாக பணமாகவோ, பொருளாகவோ உலக நாடுகள் அனைத்தும் (இந்தியாவின் எதிரி நாடான பாகிஸ்தான் உட்பட) இந்தியாவுக்கு தமது உதவிக் கரங்களை நீட்டின. இது எவ்வாறு சாத்தியமானது? உலக நாடுகள் அனைத்தும் அழிவுப் பகுதிக்கு விஜயம் செய்துதான் பூகம்பத்தின் தாக்கத்தினை கண்டறிந்தார்களா? இல்லவே இல்லை! பூகம்பத்தின் விளைவுகளை நவீன தொடர்பு சாதனங்களான இன்டர்நெட் (Internet) தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றின் மூலமே அழிவின் ஆக்ரோஷத்தினை தெரிந்து கொண்டார்கள். ஏற்கனவே எதிரிகளான இந்தியாவும் பாகிஸ்தானும் இந்நிலையில் ஒத்துப்போனவர்களாக காணப்படுவார்களாயின் அதற்கு நிச்சயமாக வெகுசன தொடர்பு சாதனங்கள் காரணியாக அமைகின்றன.

எமது பண்பாட்டுவழக்கத்தில் திருமணங்கள் அநேகமாக வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் நிச்சயிக்கப்படுகின்றன. முகம் தெரியாத அந்த ஆணும் பெண்ணும் தாம் எதிர்கால தம்பதியினர் என்ற உறவினை (திருமணத்திற்கு முன்பதாக) வளர்த்துக்கொள்வாராயின் அங்கு நிச்சயம் தொலைபேசியினுடைய செல்வாக்கு காணப்படுகின்றது என்பதை எடுத்துக் கூறலாம். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித - மனித உறவுகளை வளர்ப்பதில் நவீன தொடர்பு சாதனங்கள் பெரும்பங்காற்றுகின்றன என்பதை உறுதியாக கூறமுடியும்.

அஜந்தா ராஜரட்ணம்
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

**தொடர்பு புகமான இவ்வாறு நவீன தொடர்பு சாதனங்கள் மனித - மனித உறவினைத்தடுக்கின்றன.**

நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் இன்றைய உலகை ஒரு சிறிய குட்டிக் கிராமமாக்கியுள்ளது. பல்தேச மக்கள் உறவாடப்பயன்படுத்தப் படவேண்டிய இத்தொடர்பு சாதனங்களின் நன்மைத் துறைகளை தீய வழியில் செயற்படுத்த முனைவதால் மனித உறவுப்பாலங்கள் சிதைந்து சின்னாபின்னமாகின்றன. பத்திரிகையில் இருந்து இணையம் வரை தொடர்பு சாதனங்களின் பட்டியல் விரிந்து செல்கின்றது.

தொலைக்காட்சியை எடுத்துக்கொண்டால் 24 மணிநேரமும் கண்ணுக்கும் செவிக்கும் விருந்தளிக்கும் நிகழ்ச்சிகள். இதனால் உறவினர் வீடுகளுக்கு செல்லுவது குறைவதுடன் உறவினர்கள் வீட்டுக்கு வரும்போது அவர்களை உபசரிக்காது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்துகிறோம். மேலும் மாணவர்களின் படிக்கும் நேரமும் விரயமாகிறது. மற்றும் தனிமைத்தனம் வாழ்க்கையோடு ஒட்டுவதால் வாழ்க்கைமுறை பாதிப்படைகிறது. இத்தகைய காரணங்களால் தொலைக்காட்சி மனித உறவில் விரிசலை ஏற்படுத்துகிறது.

மனித உறவை வளர்க்கப் பயன்படவேண்டிய தொலைபேசி சில சமயங்களில் 'தொல்லை பேசியாகிவிடுகிறது'. தொலைபேசியில் நீண்ட நேரம் அரட்டை அடிப்பதனால் அத்தியாவசியமான அவசரமான தகவல்களைப்பெறமுடியாமல் போகலாம் அல்லது தாமதமாக பெறவேண்டி ஏற்படலாம். சில சமயங்களில் பிரச்சனைகளும் அனாவசிய தொல்லைகளும் ஏற்பட இது வழிகோலுகிறது. உளப்பாதிப்பும் ஏற்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் தகவல் பரிமாற்றத்துடன் தொழில் நுட்பமும் இணைந்துள்ளது. இணையம் மூலம் ஒரு இடத்தில் இருந்தே அனைத்து வேலைகளையும் முடிக்கலாம் என்ற நிலை உருவாகியுள்ளதால் மனிதனுக்கு மனிதன் நேரடித் தொடர்பு அற்றுப்போய் அவன் இயந்திரம் ஆகின்றான். இதன் விளைவாக மனித இடைவினையில் பாதிப்பு ஏற்பட்டு, தன்னம்பிக்கை தளர்ந்து மனவிரக்தி சோர்வு என்பன ஏற்படுகிறது. இணையம் ஊடாக ஆள் மாறாட்டமும், கலாசார சீர்குலைவும் வந்து கலந்து விடுகிறன.



இவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மனித - மனித உறவைத் தடுக்கிறது.

சிந்தியா கிறிஸ்ரி
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

**கருத்துக்களியம் - 88**

தற்கால தமிழ் சமூகத்தில் ஆண், பெண் இருபாலாரும் பொறுப்புக்களை பேதமின்றி பகிர்ந்து கொள்கின்றனர் / கொள்வதில்லை

உங்கள் கருத்துக்களை நாங்கள் அறிந்துகொள்ள நாளில் மோதவிடுங்கள்.

## தொலை உளத் தொடர்பு - Telepathy

'ரெலிபதி' யை நாம் "தொலை உளத்தொடர்பு" என அழைக்கலாம். சாதாரண ஐம்புலன்களாலோ அல்லது பரிவர்த்தனை ஊடகங்களினூடோ அல்லாமல் உளச்சக்தியினால் உணர்த்துவதைத் ரெலிபதியென அழைப்பர். செய்தியை வழங்குபவருக்கும் பெறுபவருக்கும் இடையிலான தூரம் சில தருணங்களில் ஆயிரக்கணக்கான மைல்களாகவும் இருக்கலாம்.

அநேக தடவைகளில் நெருக்கமான உறவு கொண்டவர்கள் இத்தொடர்பு வழி தூண்டப்படுவதுண்டு. வழங்குபவரும் பெறுபவரும் ரெலிபதி சக்தி கொண்டவர்களாக இருந்தால்தான் இது சாத்தியப்படும். ரெலிபதிச் சக்தி ஆளுக்காள் வேறுபட்டுக்காணப்படுகின்றது.

உளவியல் விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகள் இந்த ரெலிபதியை உறுதி செய்வதாக இல்லை. இவ்வாறான ஒன்று உண்டு என ஒரு பகுதியினர் அனுபவ அடிப்படையிலான ஆதாரங்களை முன்வைத்தபோதும் மறுசாரார் விஞ்ஞானபூர்வ ஆதாரமற்ற / நிச்சயமற்ற தன்மைகளை முன்வைத்து ரெலிபதியை மறுக்கவும் செய்கின்றனர்.

காலத்திற்குக்காலம் இந்த "ரெலிபதியின்" பேச்சு உளவியல் உலகில் வந்துபோய்க்கொண்டே இருக்கின்றது. இது தொடர்பான ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

உங்கள் அனுபவம்கூட இதற்கு சாதகமான ஆதாரமாகலாம் முயன்று பாருங்கள் ஆனால் முட்டிக்கொள்ளாதீர்கள்.

சத்தமின்றி சைகையின்றி அர்த்தமொன்று வருகுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரத் தொடர்பாடல்

## (Business Communication)

அன்ரனி அனஸ்ரின் றோச்
முகாமைத்துவ கற்கை நெறி, பல்கலைக்கழகம்

தொடர்பாடல் அல்லது செய்தித் தொடர்பு அல்லது தகவல் பரிவர்த்தனை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களிற்கிடையில் கருத்துக்கள், உணர்வுகள், எண்ணங்கள் என்பன பரிமாற்றப்படும் ஒரு பரிமாற்றத் தொழிற்பாடே (Transactional Process) ஆகும். தொடர்பாடல் (Communication) என நாம் பிரயோகிக்கும் சொல், லத்தீன் சொல்லான 'COMMUNIS' என்பதிலிருந்தே வந்ததாகும். Professor: L. M. Prasad, தனது Principles and Practice of management என்னும் நூலில் தொடர்பாடல் என்பதனை பின்வருமாறு வரையறுக்கின்றார். "Communication is a Transactional process between senders and receivers who share some kind of information".


இந்த வகையில் ஒரு நிறுவனத்தில் பல்வேறு தேவைகளின் பொருட்டு, தொடர்பாடல் மேற்கொள்ளப்படுகின்றது. அவற்றில் முக்கியமானவை சில கீழே தரப்படுகின்றன.

1. நிறுவன ஊழியர்களுக்கு அறிவுறுத்தல்களை (Instructions) வழங்குவதற்கு.
2. ஊழியர்களிடம் இருந்து தகவல்களை சேகரித்துக் கொள்ளவும் (Collecting data from subordinates). கருத்துக்களை பரிமாறவும் (Share kind of ideas).
3. பிரச்சினைகளை கலந்தாலோசிக்கவும், கூட்டாகத் தீர்மானம் எடுக்கவும்
4. முகாமைக்கும் ஊழியர்களுக்குமிடையிலான முரண்பாட்டை நீக்கி, அவர்களுக்கிடையில் ஒரு நல்லுறவினைப் பேண. (Elemenate conflict between administration and subordinate and to keep good relationship among themselves).
5. நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளுக்கிடையில் இணையாக்கலை (Coordination) மேற்கொள்ள.

### தொடர்பாடல் வழித்தொடர் (Communication process)

தொடர்பாடல் வழித்தொடர்முறையில், ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு செய்தியானது சென்றடைகின்ற முறையினையே தொடர்பாடல் வழித்தொடர்முறையானது விளக்குகின்றது. இதனை கீழ்வரும் வரிப்படம் மூலமாக காட்ட முடியும்.






### அனுப்புபவர் (Sender)

ஒரு தேவை ஏற்படுகின்றபோது தொடர்பாடல் வழித்தொடர் முறையானது ஆரம்பிக்கும். அத்தேவைப்பாட்டை உடையவரோ, அவரே தகவலை அனுப்புபவர் (Sender) ஆவார். (The person who intends to make contact with the objective of passing information, ideas, to other persons is known as sender) தொடர்பாடலானது வினைத்திறமையாக (effective) அமைவதாயின் செய்தியை பெறுபவர் (Receiver) அனுப்புபவரது நோக்கத்தினை (Objective) சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

### வடிவமைத்தல் (Encoding)

செய்தியை அனுப்புபவர், தான் அனுப்ப வேண்டிய தகவலை, பெற்றுக் கொள்பவர் விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு வடிவத்தில் வடிவமைத்தல் வேண்டும். இச் செயற்பாடே Encoding எனப்படும். (Conversion of the subject matter into these symbols such as words, actions, pictures is the process of Encoding.

### ஊடகம் (Channel).

செய்தியை அனுப்புபவரிடம் இருந்து பெறுபவர்க்கிடையில் செய்தியானது (Message) பரிமாற்றப்படும் விதம். செய்தித் தொடர்பு வழிமுறை அல்லது ஊடகம் (Channel) ஆகும். (Symbols are transmitted through certain channels such as radio, telephone, air).

### விளங்கிக் கொள்ளல் (Decoding).

பெற்றுக் கொள்பவரால் செய்தியானது உரியமுறையில் விளக்கம் கொடுக்கப்பட்டு தகவலாக மாற்றப்படும் செயற்பாடே Decoding எனப்படும். (Receiver converts the symbols received from the sender to give him the meaning of the message).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெறுபவர்** (Receiver)

அனுப்புவரால் அனுப்பப்படும் செய்தியானது யாரிடம் போய் சேரவேண்டுமோ அல்லது யாருக்கு உரியதோ அல்லது யார் பெறுகின்றாரோ அவரே பெறுபவர் ஆவார். (Receiver is the person to whom message is meant for).

**பின்னூட்டி** (Feed back)

இது ஒரு தொடர்பாடல் வழித்தொடர்முறையினை பூரணமாக்கும். தகவலைப் பெற்றுக் கொண்டவர் தனது விளக்கத்தினை வெளிப்படுத்துகின்ற விதம் பின்னூட்டி ஆகும். (Feed back is necessary to ensure that the receiver has received the message and understands it in the same sense as sender wants). உதாரணமாக, விரிவுரை மண்டபத்தில் கேட்கப்பட்ட கேள்வி தொடர்பாக விடை கூறுதல் அல்லது குறித்த விடயம் தொடர்பாக மறுப்புத்தெரிவித்தல்.

**தொடர்பாடலிற்கான அடிப்படை விதிகள்**

ஒரு நிறுவனம் வினைத்திறனுடைய தொடர்பாடலை (Effective communication) பெறுவதற்கு சில அடிப்படை விதிகளை பின்பற்றுதல் வேண்டும். இதனால் விரைவான, சரியான, வினைத்திறனுடைய முகாமைத்துவ வழித்தொடர்முறைகள் (managerial process) ஊடாக திட்டமிட்டபடி நிறுவன இலக்குகளை (Goals) அடைந்து கொள்ளமுடியும். தொடர்பாலிற்கான அடிப்படை விதிகள் வருமாறு.

1. தொடர்பு கொள்ள முன்னரே, தொடர்பாடலின் நோக்கம் (Purpose of communication) என்ன என்பதை தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.
2. தொடர்பாடல் விளைவுகளை கவனத்தில் கொள்ளவேண்டும். அதாவது குறிப்பிட்ட செய்தி எப்பெறுபேறுகளை பெற்றுத்தரும் என கவனிக்க வேண்டும்.
3. அனுப்பப்பட தயாராக உள்ள செய்தியை மீளாய்வு செய்து, சகல தகவல்களையும் அது கொண்டுள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.
4. அனுப்பப்படும் செய்தியானது சுருக்கமாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டும்.
5. தொடர்பாடல் மேற்கொள்ளப்படவேண்டிய நேரம் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.
6. தகவலைப் பெற்றுக் கொண்டவர் அதை சரியாக விளங்கிக் கொண்டாரா என பின்னூட்டியை (Feed back) பெறவேண்டும்.
7. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டி இருப்பின் அதைக் குறித்துக் கொள்ளவேண்டும்.



## உளவியல் பற்றிக் கொஞ்சம் உங்களுடன்....

-கோகிலா மகேந்திரன்
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
யாழ். கல்வி வலயம் II

ஒரு நாள் இரவு! அவருடைய கட்டிலில் பூச்சிகள் பல கூடு கட்டிவிட்டன. அவர் மெத்தையைத் தூக்கித் தூக்கிப் பார்த்தார் ஒன்றையும் காணவில்லை! கனவுகள் இப்படிச் சில சமயங்களில் விழித்த பின்னரும் நனவு போலவே இருப்பது ஏன்?

பாடசாலை மாணவரிடையே ஒழுக்கக் குறைவும், ஆக்ரோஷ உணர்வும், வன்முறை நடத்தைகளும் மிக வேகமாக அதிகரித்து வருவதைப் பலரும் அவதானித்துள்ளனர். இவற்றைத் தூண்டும் காரணிகள் எவை?

நாலு பிள்ளைகளைக் கொண்ட ஒரு குடும்பத்தின் தந்தையும் தாயும் மணவிலக்குப் பெறத் தீர்மானித்து விட்டனர். தான் பிரிந்து வாழவும், மணவிலக்குப்பெறவும் தேவையான வலிமையான நியாயங்கள் இருப்பதைப்பெண் நீதிமன்றில் நிறுவியுள்ளார். ஆயினும் இந்த நிகழ்வு அவர்களின் பிள்ளைகளில் என்ன விளைவுகளை ஏற்படுத்தப்போகிறது?

தமது உடல் நிறையைக் குறைப்பதற்கு கோடிக்கணக்கான மக்கள் முயன்று வருகிறார்கள். (குறிப்பாகப் பெண்கள்) இந்த நிறைக் குறைப்பிலே ஹிப்னோசிஸ் (hypnosis) உதவும் என்று சஞ்சிகை ஒன்றில் வெளியான கட்டுரை கூறுகிறது. இது உண்மைதானா? உடல் நிறையைக் குறைப்பது என்பது ஏன்தான் இவ்வளவு கடினமாக இருக்கிறது?

ஒரு வீட்டில் ஒரு பூனைக்குட்டி இருக்கிறது. நீங்கள் எவ்வளவுதான் கஷ்டப்பட்டு எப்படி அழைத்தாலும் அது குசினிக்குள் வரமறுக்கிறது. தூக்கித்தான் கொண்டுவந்து குசினிக்குள் விட்டாலும், அடுத்த கணமே பாய்ந்து வெளியே ஓடி விடுகிறது. வீடு முழுவதும் குசாலாக ஓடித்திரியும் பூனைக்குட்டிக்கு இந்தக் குசினி தொடர்பான பயம் எப்படி ஏற்பட்டிருக்கலாம்?

தனக்கு நெஞ்சு நோவும் நெஞ்சிறுக்கமும் அடிக்கடி ஏற்படுவதாயும் மூச்சு விட மிகவும் சிரமமாய் இருப்பதாகவும் ஒரு பெண் முறைப்பாடு செய்துள்ளார். அவரைப் பரிசோதித்த வைத்திய நிபுணர்கள் அவருக்கு இதயத்திலோ, நுரையீரலிலோ அல்லது நெஞ்சின் வேறு எந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியிலுமோ எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறுகிறார்கள். அப்படியானால் அந்தப் பெண்ணின் முறைப்பாடு பொய்யா?

மேலே கூறப்பட்ட வினாக்களுக்கும் இன்னும் இவற்றைப் போன்ற ஆயிரக் கணக்கான வினாக்களுக்கும் விடை தருகின்ற மிகச் சுவாரசியமான விஞ்ஞானத்துறை உளவியல். அது மனத்தையும் ஆன்மாவையும் பற்றிய கற்கை. அதனால் கற்றல், ஞாபகம், மொழி, எண்ணம், உணர்வு, ஊக்கல், மணமுறிவு, பாலியல் வன்முறை, இனவாதம், பழமைபேணல், சூழல் மாசடைதல், உள ஆரோக்கிய விருத்தி, வாழ்வு முறைகள், பதற்றம், தொடர்பாடல், சில உடல் நோய்களுக்கும் உணர்வுக்கும் உள்ள தொடர்பு, ஜெற் விமான வடிவமைப்பு போன்ற பல விடயங்களை ஆராயும் விஞ்ஞானமாக உள்ளது.

உளச் செயற்பாடுகள், நடத்தைகள் ஆகிய விடயங்களில் குவியம் கொண்டுள்ள இந்த விஞ்ஞானம், மருத்துவ உளவியல், சீர்மிய உளவியல், கல்வி உளவியல், சமூக உளவியல், விருத்தி உளவியல், கைத்தொழில் உளவியல், பரிசோதனை உளவியல், அறிகை உளவியல் பாடசாலை உளவியல், உடற்றொழில் உளவியல் என்று தொடர்ந்து விரிந்த வண்ணம் உள்ளது.

Wilhelm Wundt என்பவரே விஞ்ஞான பூர்வமான உளவியலின் தந்தை எனப் பேசப்படுகிறார். அவரைத்தொடர்ந்து வந்த உளவியலாளர்கள் பலரும் முன்வைத்த கொள்கைகளின் அடிப்படையில் அவர்களை நாலு பெரிய பிரிவுக்குள் அடக்கலாம்.

1. நடத்தை வாத உளவியலாளர்
2. அறிகை வாத உளவியலாளர்
3. மனிதாய வாத உளவியலாளர்
4. உளப் பகுப்பாய்வு வாத உளவியலார்

John Watson என்பவரை நடத்தைவாத உளவியலாளர் குழுவின் முதல்வர் எனலாம். "என்னிடத்தில் ஒரு குழந்தையைத் தாருங்கள் நீங்கள் விரும்பியபடி அவரை ஆக்கிக் காட்டுவேன். வைத்திய நிபுணராகவா? கள்வர் தலைவனாகவா? என்று சூளுரைத்தார் உவொட்சன் தூண்டி ஒன்று துலங்கலை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் உருவான இக்கொள்கை 1960 வரையான காலப்பகுதியில் மிக முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக இருந்தது.



அறிகை வாத உளவியலாளரின் முன்னோடி என Ulric Neisser ஐக் கூறலாம். தூண்டி ஒன்று துலங்கலை ஏற்படுத்துவதற்கு இடையில் மூளை என்கின்ற கறுப்புப் பெட்டி ஒன்று உள்ளது.

தூண்டி → கறுப்புப்பெட்டி → துலங்கல்

அந்தக் கறுப்புப் பெட்டிக்குள் என்ன நடைபெறுகிறது என்பதே முக்கியமான விடயம் என்று இந்தக் குழு கூறியது. 1970களில் இவர்களின் கருத்து முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. சிலரது மூளை இரண்டு வெவ்வேறு சிக்கலான விடயங்களைக்கூட ஒரே நேரத்தில் சமாந்தரமாகச் செய்து முடித்து விடுகிறது என்று இக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

மனிதாயவாத உளவியலாளர்களில் முக்கியமானவர் Maslow. மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் நல்லவர்கள் என்பது இவரது ஆணித்தரமான கருத்து. அவர்கள் தங்களைத்தாங்களே புரிந்து கொள்வதற்கும் தமக்குள் மறைந்திருக்கும் ஆற்றல்களின் உச்சத்தை வெளிக்கொணரவும் உதவவேண்டும் என்று இக்குழு கருதியது. சுய திறன் நிறைவு பெற்ற மனிதர்களைப்பற்றி இவர்கள் மிக அக்கறை காட்டினார்கள்.

உளப்பகுப்பாய்வுக் கொள்கையின் பிதாமகர் Sigmund Freud மனிதர்களின் கனவுகள் அவர்களின் சுயாதீன உரையாடல்கள் ஆகியவற்றின்மீது இவர் அதிக ஈடுபாடு காட்டினார். நனவிலி மனதின் விருப்பங்கள், பயங்கள், முரண்பாடுகள், உந்தல்கள் பற்றி நிறையவே பேசினார் நனவிலி மனத்தை நனவு மனதுக்கு நெருங்கி வரச்செய்வதே வெற்றியின் அடிப்படை என்று கருதினார். தற்செயலாக வருகின்ற சொற்கள், நாத்தவறி வருகின்ற வசனங்கள், நகைச்சுவை கருதிக்கூறப்படும் விடயங்கள் அனைத்தும் அர்த்தம் பொதிந்தவை என்று கூறினார். ஆழ்மனத்தொடர்பில்லாமல் அவை வெளிவராது என்பது அவரின் கருத்து.

உலக மகாயுத்தத்தின் போது ரஷ்யப்போர்வீரர் ஒருவருக்கு தலையின் இடதுபக்கம் காயம் ஏற்பட்டது. அதன் பின்னர் அவருக்கு உலகம் துண்டு துண்டாகத் தெரிந்தது. ஒரு பொருளும் முழுமையாத் தெரியவில்லை. ஆகவே வெளி பற்றிய அவரது பிரக்ஞையில் மாற்றம் ஏற்பட்டது. அதன் விளைவாக அவரது நடத்தை பெரிதும் மாறியது. ஆகவே ஒருவரது அறிகையிலும் நடத்தையிலும் மூளை மிகப்பெரிய பங்கு வகிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு. எமது உடலில் உள்ள திரில்லியன் கணக்கான கலங்களை எமது நரம்புத் தொகுதியும், அகஞ்சுரக்கும் தொகுதியும் சேர்ந்து வழிப்படுத்துகின்றன.

எண்ணம், நினைவு விடயங்களைக் கிரகித்தல், மொழியைப் பாவித்தல் போன்ற முக்கிய விடயங்களை மனித மூளை கட்டுப்படுத்துகிறது. மூளையின் திறமைமிக்க செயற்பாடுகளைக் கொண்டவர்கள் சமூக வாழ்வில் வெற்றி அடைந்தார்கள். ஆகவே படிப்படியாக நுண்மதி ஆற்றல் கூடிய மனித இனம் கூர்ப்படைந்து வருகிறது. வாழ்விலே போட்டிக்கும் ஒற்றுமைக்கும் இடையில் சரியான சமநிலையைப்பேணிக் கொள்ளும் மனிதர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள்.

*****************************************************

## தொடர்பு(க/கொ)ள்

ஓடிவரும் அலைகளின்
தேடல் தோற்றாலும்
கரைகளின் உறவையென்றுமே அவை
கரைத்ததில்லை! அறுத்ததில்லை!!

சுவாசிக்கும் காற்றும்
இல்லாரும் பொல்லாரும்
வாழுமிவ் வுலகில்
தன்தொடர்பை யென்றுமே
தகர்த்ததில்லை! நிறுத்தியதில்லை!!

காத்திருக்கும் பூமிக்கும்
காலத்தே தன்தொடர்பை
வழங்கி வளம் சேர்க்க
வானமும் தாழ்ப்பாள் போட்டதில்லை

பகுத்தறிவு எட்டாத
பறவைகளும் விலங்குகளும்
தமக்குள் ஒலியெழுப்பி
தொடர்பினைக் கொள்ளுமாமே!

பேசாத மாந்தருக்கும்
மௌன மொழி பகரும்
குறியீட்டு பாஷைகளும்
தொடர்பினைக் கொடுக்குமாமே!

பகுத்தறிவைத் தாங்கி பேசும்
பிராணியான மனிதனே!
புதிய உறவுகளின்
கட்டியெழுப்பல்களுக்கு
உடைந்த உறவுகளின்
புனரமைப்பிற்கு
தொடர்பு கொள்!
புரிந்து கொள்வாய்
தொடர்பு கொள்
புரியச் செய்வாய்
தொடர்பு கொள்

கலங்கரை விளக்காவாய்
தொடர்பு கொள்
உன்னையறிவாய்
கட்டடங்கள் கைகளால்
கட்டப்படும் - ஆனால்
உறவுகள்
தொடர்புகளால் தான்
கட்டப்படும்.

J.M.T. றொட்றிக்கோ
கொக்குவில்





# மனித முன்னேற்றத்தில் தொடர்பாடல்

இமானுவேல் டயஸ் (வங்காலை)
சமூகவியல் சிறப்புக்கலை
யாழ். பல்கலைக்கழகம்

தொடர்பாடல் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையில் கருத்துக்கள், உணர்வுகள், எண்ணங்கள் என்பன பரிமாறப்படும் ஒரு இடைவினை தொடர்பாடல் எனப்படும். மனிதனாக பிறந்த ஒவ்வொருவரது வாழ்விலும் தொடர்பாடல் என்பது பிறப்புமுதல் இறப்புவரை உயிர்நாடியானதாக விளங்குகிறது. மனித வாழ்வுடனும் மனிதனுடைய தேவைகளுடனும் தொடர்பாடல் இறுகப்பின்னிப் பிணைந் துள்ளது. தொடர்பாடலில் பேச்சு, எழுத்து மட்டுமன்றி எண்ணக்கரு, வாசித்தல், கேட்டல், சைகை என்பனவும் அடங்குகின்றன. தொடர்பாடலே இன்று ஒரு நாகரீகமாக வளர்ந்து வருகின்றது.

தொடர்பாடலின் முக்கியத்துவம் உலக சமூகத்தின்பால் வரையறையிட்டு கூறமுடியாத பரந்தவையாக காணப்படுகின்றது. தான் நினைத்ததனை தெரிவிக்கவும் பிறர் நினைப்பதனை தான் அறிந்து கொள்ளவும் சிந்தனை, எண்ணங்கள், கருத்துக்கள் மக்களிடையே பரிமாறப்படு வதற்கும் தொடர்பாடலே பிரதான ஊடகமாக காணப்படுகின்றது.

திறமான தொடர்பாடலானது இருவழித்தொடர்பாடலாகவும், செய்தியில் உண்மைத் தகவல்கள் உள்ளடங்கியிருப்பதாகவும் சுருக்கமானதாகவும், தெளிவானதாகவும் சட்ட அங்கீகாரம் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும். தகவல் பரிமாற்றமானது பல்வேறு வழிகளில் அமைகின்றது. பேச்சு மூலத்தகவல் பரிமாற்றம், எழுத்து மூல தகவல் பரிமாற்றம், இயந்திரங்கள் மூலமான தகவல் பரிமாற்றம், சைகைகள் மூலமான தகவல் பரிமாற்றம், என்றவாறாக காணப்படுகிறது. பேச்சு மூல தகவல் பரிமாற்றம், விரைவானதாகவும், செலவு குறைந்ததாகவும் ஒரே நேரத்தில் பலருக்கு தகவல் தெரியப்படுத்தக் கூடியதாகவும் சந்தேகம் எழுகின்றபோது உடன் தீர்க்கக் கூடியதாகவும் காணப்படும். எழுத்து மூலமான தகவல் பரிமாற்றம் எனும்போது கடிதங்கள், அறிக்கைகள், சுற்று நிருபங்கள், வரைபடங்கள் மூலம் இடம்பெறுகின்றன. இயந்திரங்கள் மூலம் தகவல் பரிமாற்றம் எனும்போது பக்ஸ் (Fax) Telex போன்றன மூலம் தகவல் பரிமாறுவதனைக் குறிக்கும். சைகை மூலம் தகவல் பரிமாற்றம் எனும்போது ஒலி, ஒளி குறிகாட்டிகள் மூலம் கருத்துக்கள் பரிமாறப்படுவதனை குறிக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடல் திறனை அமைவதற்கு பரிமாறப்படும் விடயம் தெளிவானதாகவும் அனுப்பப்படும் செய்தியானது பெறுபவருக்கு தேவையான காலத்தில் கிடைக்கக்கூடியதாகவும், செய்தியினை பெறுபவர் பெற்றவை சரியென உறுதிப்படுத்தல் வேண்டும். தொடர்பாடலில் காணப்படும் தடைகளாக மொழிப்பிரச்சினை, உளவியற்தடைகள், அமைப்புத்தடைகள், பணியாளர் தடைகள் என்பன சிறப்பான தொடர்பாடற்செயற்பாட்டில் இடையூறாக காணப்படுகின்றன.

இத்தகைய தொடர்பாடற் செயற்பாடுகள் மனித வாழ்க்கையின் நிலைப்புக்கும் முன்னேற்றத்துக்கும் இன்றியமையாதன. உலகில் காணப்படுகின்ற இத்தகைய தொடர்பாடல் முறைகளை நவீன கண்டுபிடிப்புக்கள், விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிகள் மிகவும் வேகமாக முன்னேற்றத்தின் உச்சிக்கு கொண்டுபோய் விட்டிருந்தாலும் அந்த விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு விருத்திக்கும் இந்த தொடர்பாடலே பிரதானமாக அமைகிறது எனக்கூறின் மிகையில்லை.

***

## அன்புக்கட்டளை / Love Order

'நான்' ஆண்டு 2001 இற்கான சந்தாவைச் செலுத்த உங்கள் காசுக்கட்டளைகளை (Money Orders) அனுப்பி வையுங்கள்.
பணம் பெறுபவர்: ஆசிரியர் 'நான்'
பணம் பெறும் அலுவலகம்: தலைமைத் தபாலகம், யாழ்ப்பாணம்.

## "நான்" ஆண்டு - 2001

மூன்றாம் மில்லேனிய முதலாண்டில் "நான்" தாங்கிவருவன.....

2001 தை – மாசி - புனர்வாழ்வு
2001 பங்குனி – சித்திரை - முன்னேற்றம்
2001 வைகாசி – ஆனி - தலைமைத்துவம்
2001 ஆடி – ஆவணி - அநுபவம்
2001 புரட்டாதி – ஐப்பசி - தொடர்பு
2001 கார்த்திகை – மார்கழி - பொறுப்பு



# வாலிப வசந்தம்



உலகமே ஒரு கிராமமாக மாறியிருக்கிறது. காரணம் உலகில் ஏற்பட்ட தொடர்புசாதன வாய்ப்புகளே. நவீன கண்டுபிடிப்புக்களின் பின்னணி நாயகனாகிய பரம்பொருள் என்றும் எம் நன்றிக்குரியவர்.

ஒருவரோடு ஒருவர் கொள்ளும் தொடர்பினால் மனிதன் தன்னை வளர்த்துக்கொள்கிறான். உணர்வு பரிமாற்றத்தாலும் சிந்தனைப் பரிமாற்றத்தாலும் மனிதன் தன்னை வளர்த்துக்கொள்ளுகின்றான். தொடர்பு இன்றேல் வளர்ச்சி இல்லை. மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது தொடர்பு. இது மறுக்கப்பட முடியாத மனிதனது உரிமை.

எந்தவித வெளித்தொடர்புமில்லாமல் ஒரு குழந்தையைத் தனிமைப் படுத்தினால் அது மிருகத்தைவிட கீழ்த்தரமான நிலையில்தான் இருக்கும். தொடர்புகளை வளர்த்துக் கொள்பவர்கள் வாழ்வில் என்றுமே சலிப்படைவதில்லை. அறிவிலும் ஆற்றலிலும் ஆளுமையிலும் உணர்வுகளிலும் அவர்கள் முழுமையடைகின்றனர்.

தொடர்பு மக்களோடு மட்டும் சேர்த்துப்பேசப்படும் விடயமல்ல. இயற்கையோடு உள்ள தொடர்பு இறைவனோடு உள்ள தொடர்பு என்பவை பற்றியும் பேசலாம். இறைவனோடும் இயற்கையோடும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியவர்கள் ஞானிகளாக இருந்திருக்கின்றனர். நவீன ஆராய்ச்சிகளின் முடிவுகளை பரம்பொருளும் இயற்கையும் என்றோ அவர்களுக்கு கற்றுக்கொடுத்து விட்டன. கீழைத்தேய தத்துவங்களெல்லாம் இயற்கையில் இருந்தும் இறைவனிடம் இருந்தும் கற்றுக்கொண்டவைதாம்.

இளையோரே உங்களோடு உங்களுக்கு நெருங்கிய தொடர்பு இருக்கின்றதா? அடிப்படையில் எல்லோருக்கும் தேவைப்படுவது அதுதான். தன்னோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளாதவனுக்கு வெளித் தொடர்புகளால் அதிக நன்மை கிடைக்கப் போவதில்லை. உன்னை அறிந்தால் உலகத்தை அறியலாம். உன்னை அறிவதற்கு உன்னோடு உனக்கு தொடர்பு இருக்கவேண்டும். உன்னோடு உனக்குள்ள தொடர்பு எப்படிப்பட்டது.

உறவுக்குப்பாலம் தொடர்பு. தொடர்பைத்துண்டித்தால் உறவும் துண்டிக்கப்படும். உறவில் வளரவேண்டுமா தொடர்பை பூரிதப்படுத்துங்கள்.

மீண்டும் சந்திப்போம், கலந்து சிந்திப்போம்.

- இளவல் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகநோய்களின் மேல் ஒரு கண்

## Sociopathy – An Overview

**டொறின் அருளானந்தம்**
உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்.

மனிதன் ஒரு சமூகப்பிராணி என்கின்றார் அரிஸ்டோட்டில். மனிதன் தான் வாழுகின்ற சமூக நிலைமைக்கேற்ப தன்னுடைய நடத்தையை அமைத்துக் கொண்டிருக்கின்றான். அவனது சிந்தனையும் செயற்பாடும் அவன் வாழும் சமூகத்தை ஒட்டியதாகவே காணப்படுகின்றது என்பது சமூக உளவியலாளரது கருத்து. சமூக உளவியலாளரான Elliot Aranson சமூக நிலைமைகளும் நடைமுறைகளும் சமூக நடத்தையை உருவாக்குகின்றன என்கிறார். இவர் கூறுவதாவது :
People who do crazy things are not necessarily crazy
(பயித்தியகாரத்தனம் புரிவோரெல்லாம் பயித்தியகாரரல்ல)
Ellen Bercheid என்பவரது கருத்துப்படி, மனிதன் ஒரு திருப்தியற்ற நடத்தையை சுட்டி இனங்காட்டுதல் (Labelling) மூலம் வெளிக்கொணருகின்றான். அதாவது ஒருவன் சமூக செல்நெறிகளிலிருந்து மாறுபடும்போது அங்கு அவன் மாறுபட்டவனாக இனங்காட்டப்படுகின்றான். இங்குதான் விலகல் நடத்தை (Deviant behaviour) எனும் பதம் வலுப்பெறுகின்றது. அதாவது தனியன் ஒருவன் தான் சார்ந்திருக்கும் குழுவிலிருந்தோ அல்லது சமூகத்திலிருந்தோ மாறுபட்டு காணப்படுவானாயின் அவன் விலகல் நடத்தைக்காரன் எனப்படுவான். இங்கு நடத்தை தொடர்பான இன்னொரு கருத்தியலை நோக்குதல் வேண்டும்.

சமூக எதிர் நடத்தை (Anti Social behaviour) எனும்போது நாம் விளங்கிக் கொள்வது யாது? இதுவும் விலகல் நடத்தைதானே எனும் ஐயப்பாடு எம்முள் எழலாம். ஆனால் சமூக உளவியல் நோக்கில் விலகல் நடத்தை வேறு, சமூக - எதிர் நடத்தை வேறு. விலகல் என்பது சார்புடைய ஓர் எண்ணக்கருவாகும். சில சந்தர்ப்பங்களில் விலகல் நடத்தை கொண்டவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி நோக்குவது பொருத்தமற்றதாகக் காணப்படுவதுண்டு.

### விலகல் நடத்தையில் சமூக ஒப்பீட்டுக் கோட்பாடு
### (Theory of Social Comparison in Deviant Behaviour)

**Freedman, Doob** என்பவர்கள் விலகல் நடத்தையினை சமூக ஒத்துப்பார்த்தல் கோட்பாடு மூலம் விளக்குகின்றனர். அதாவது தனியன் ஒருவன் தன்னை ஏனையோருடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றவேளை, தனது குணாம்சங்களின் ஒத்த தன்மைகளை யாரிடத்தேயும் இனங்காணும் போது அவர்களது கூட்டுறவை நாடுகின்றான்.

உ+ம்
ஒரு பால்ய நெறிபிறழ்வோன் (Juvenile Delinquent) இன்னொரு பால்ய நெறிபிறழ்வோனின் கூட்டுச் சேர்க்கையையே விரும்புவான்.

இதற்கு இரண்டு வகையான காரணங்களை எடுத்துக்காட்டுகின்றனர் Freedman ம் Doob ம்.

1. The fear of rejection – நாம் நிராகரிக்கப்படுகின்றோமே என்கின்ற பயம்.
2. The need for social comparison and affiliation – சமூக ஒப்புமைக்கும் இணைக்கத்திற்குமான தேவை.

### சமூக எதிர் நடத்தை
### (Anti Social Behaviour)

விலகல் நடத்தையானது அநேகமான சந்தர்ப்பங்களில் சமூக ஸ்திரத்தன்மைக்கான அச்சுறுத்தலாகவே (A threat to social stability) காணப்படுகிறது. ஆனால் சமூக எதிர் நடத்தையோ அவ்வாறான தொன்றல்ல. விலகல் நடத்தையைவிட காத்திரமானது. இது வெளிப்படையான காரண காரிய தொடர்புகளினிமித்தம், உடனடித் தேவைகளை திருப்திப்படுத்தும் பொருட்டு, திடீர் உணர்ச்சிகளுக் காட்படுகின்ற (Impulsive) பொறுப்பற்ற செயற்பாடாகும். இச்சமூக எதிர் நடத்தைகளை 4 வகைப்பாட்டிற்குள் கொண்டு வருகின்றனர் சமூக உளவியலாளர்.

1. சமூக நோய் (Sociopathy)
2. குற்றவியல் நடத்தை (Criminal Behaviour)
3. போதைவஸ்து பாவனை (Drug Addiction)
4. பாலியல் விலகலும் ஒழுங்கின்மையும் (Sexual Deviation and Disorder).

இவ்வகையான நடத்தையானது குறிப்பிட்ட தனியனது ஆளுமை விருத்திக்கு தடைக்கல்லாக அமைவது மட்டுமல்லாமல் அவர்களது சமூக இணக்கத்திற்கும் (Social adjustment) பங்கம் ஏற்படுத்துகின்றது எனலாம்.

இந்த வகையில் சமூக நோய் பற்றி நோக்குவோம் எனின், சமூகநோயை உளவியலாளர் உளநோய் (Psychopathy) என குறிப்பிடுவர். இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை தொடர்பான சமூக எதிர் நடத்தையாகும் (Anti social behaviour of personality). ஒரு ஒழுங்குமுறைக்குட்பட்ட சமூகமயமாதலுக்குட்படாதவர் களிடத்தே இச்சமூகநோய் காணப்படுகிறது. இந்நோய் சம்பந்தப்பட்டவர் களது நடத்தைக்கோலங்களானது திரும்பத்திரும்ப சமூக முரண்பாட்டை தோற்றுவிப்பனவாகக்காணப்படும்.

**சமூக நோயாளன் எனப்படுபவன் யார்?**

(Who is a Sociopath?)

சமூகவியலாளரும் உளவியலாளரும் சமூக நோயாளன் (Sociopath) ஒருவனது பண்புகள் இன்னவிதமானவையாக இருக்கும் என எடுத்துக் காட்டுகின்றனர்.

- இவர்கள் மேற்போக்கான மருட்சியும் அறிவுத்திறமும் (Superficial charm and intelligency) கொண்டவர்களாகத் தென்படுவர். இவர்கள் எப்போதும் மகிழ்ச்சியுடையவராக, மற்றவர்களுடன் நன்றாக அளாவுபவராக காணப்படுகின்ற அதேவேளை தம் நிமித்தம் மிகவும் எச்சரிக்கை உடையவராக இருப்பர். இவர்களது நற்பண்புள்ள வெளித்தோற்றம் மற்றவர்களை சுரண்ட இவர்களுக்கு உதவுகிறது.
- இவர்கள் குறைவான சுயகட்டுப்பாடு உடையவராகக் காணப்படுவர் (Lack of self control). இவர்கள் விரைவில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாகவும், தங்களது தீர்மானங்களில் திடமற்றவர்களாகவும், அகமைய நடத்தை (Ego centric behaviour) உடையவராகவும் காணப்படுவர். அத்துடன் இவர்கள் உடனடி இன்ப நுகர்விலும் ஆர்வமுடையவராவார்.
- பற்றார்வம், வெட்கம், குற்ற உணர்வு போன்ற உள்ளார்ந்த உணர்வுகள் இவர்களிடத்தே அரிதாகவே காணப்படும். ஒரு சமூக விரோத செயல்பாட்டில் ஈடுபட்டாலும்கூட அது பற்றி அவர்களுக்கு குற்ற உணர்வோ வெட்கமோ ஏறபடமாட்டாது. மாறாக, தாங்கள் செய்ததை நியாயப்படுத்த முனைவர்.
- இவர்களை பொறுத்தவரை சமூக வெகுமதிகளோ (Social rewards) தண்டனைகளோ எந்தவித விளைவையும் ஏற்படுத்தமாட்டாது. பொதுவாக கூறுமிடத்து, தனிமனித நடத்தையானது சமூக வெகுமதிகளுக்கும், தண்டனைகட்கும் ஊடாகவே செயற்படுத்தப் படுகின்றது. ஆனால் சமூக நோயாளரோ நடத்தை பற்றி அவ்வளவாக அக்கறை கொள்வதில்லை.
- இவர்கள் ஒழுங்கற்ற சமூக இணக்கநிலை உடையவராக காணப்படுவர். வெளிப்படையாக இவர்கள் ஏனையோருடன் நல்லுறவை பேணிக் கொள்வர். ஆனால் உண்மைத்தன்மை, நேர்மை பயபக்தி என்பன இவர்கள் இயல்பிற்கு அந்நியமானவை.
- தங்களது தனிப்பட்ட விருப்புகளை நிறைவேற்றும் பொருட்டு தாம தற்கொலை செய்யப்போவதாக அச்சுறுத்துவர், ஆனால் ஒருபோதும் தற்கொலை செய்யார்.
- வாழ்க்கையில் இவர்களுக்கு இலக்குகள் என்பது இருக்காது. தங்களது தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால் போதும் எனும் மனப்பாங்கினை கொண்டிருப்பர். அத்துடன் ஒழுங்கற்ற பாலியல் வாழ்க்கை முறையினையும் கொண்டிருப்பர்.

**சமூக நோய்க்கான காரண காரிய விளக்கம்**

(Etiology of Sociopathy)

சமூக நோய்க்கான அடிப்படைக் காரணிகளை பல அம்சங்களுக்கூடாக நோக்கலாம். அவற்றுட் சில,

### பரம்பரை, உயிரியற் காரணிகள்.

பலமற்ற மரபணுக்கள், குறை அறிவு விருத்தி உளப்பாதிப்புகள் உயிரி யற்பண்புகள் சமூக நோயியல் நடத்தைக்கு காரணியாக அமையலாம்.

### சமூக உளவியற் காரணிகள்.

நடத்தை என்பது சமூக கற்றல் செயற்பாடு. இதனால் சமூக நோய் என்பது நடத்தையின் கற்றற்கோலமாகும் (Learned pattern). இதில் அயலவர் சகபாடிகள், பாடசாலை போன்ற சூழலியற்காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

### பெற்றோரும் குடும்பமும்.

பெற்றோரது நடத்தைப்போக்குகள் குடும்ப அங்கத்தவர்க்கிடையேயான ஸ்திரமற்ற உறவுகள், உணர்வு பூர்வமான பாதுகாப்பின்மை, அடிப்படை தேவைகள் மறுக்கப்படுதல் போன்றவை சமூக நோய்க்கு இட்டுச் செல்லும். குடும்ப அங்கத்தவர்களுள் மூத்தவர் எனக்கருதப்படுபவர் சமூக நோயியல் நடத்தையை கொண்டிருப்பாராயின்; அவரை நடிபங்கு மாதிரியாக (Role Model) பின்பற்றும் ஏனையோரும் இவ்வகையான மனப்பாங்கினை கொண்டிருப்பதற்கான வாய்ப்புண்டு.

### என்ன செய்யலாம்?

இவ்வாறாக; சமூக நோயாளரை என்ன செய்யலாம் என்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் இவர்கள் 'தண்டிக்கப்பட வேண்டியவர்கள்' என்ற கருத்தியல் மாற்றப்பட வேண்டும். இவர்களுக்கு தண்டனை கொடுப்பதைவிட விருப்பு நடத்தைசார் மாதிரி (Modelling of Desired Behaviour) மூலம் அவர்களது நடத்தைப் போக்கை மாற்றியமைக்கலாம்.

தொடர் சீர்மியம் (Follow-up Counselling) மூலமும் இவர்களது மனப்பாங்கினை மாற்றியமைக்க முடியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இச்சமூக நோயியல் நடத்தைகளை சகித்துக் கொள்கின்ற, சமூக நோயாளரை ஏற்றுக்கொள்கின்ற மனப்பான்மையும் நம்மவர் மத்தியில் ஏற்பட வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**

Haralambos M.,*Sociology, Themes and Perspective*, Uni-tutorial Press Ltd.,1992.
Aranson E.,*The Social Anima*, W. H. Freeman & Co. 1980.
Comer Ronald J.*Abnormal Psychology*, W. H. Freeman & Co. 1992.

## ஆனை விலை குதிரை விலை

**'பெறுமதியான நானுக்கு விலைப்பெறுமதி குறைவாக இருக்கின்றதே'** என ஒரு சிலர் கருத்துக்கூறுகின்றனர்

**'இவ்வாறான புத்தகம் எல்லோரையும் சென்றடைய அவ்விலைதான் பொருத்தம்'** என மறுசாரார் கூறுகின்றனர்.

☛ **நீங்களோ என்ன சொல்லுகின்றீர்கள்?**

## தூரநோக்கு "நான்" ஆண்டு – 2002

**வருமாண்டில் எதிர்பாருங்கள்**

| | | |
|---|---|---|
| 2002 | தை – மாசி | - (பொதுத்தலைப்பு) |
| 2002 | பங்குனி – சித்திரை | - குற்றவுணர்வு |
| 2002 | வைகாசி – ஆனி | - தன்னம்பிக்கை |
| 2002 | ஆடி – ஆவணி | - (பொதுத்தலைப்பு) |
| 2002 | புரட்டாதி – ஐப்பசி | - இலக்கமைத்தல் |
| 2002 | கார்த்திகை – மார்கழி | - முகம்கொடுத்தல்/முன்னெடுத்தல் |



## அடுத்த நானில் எதிர்பாருங்கள்

**கார்த்திகை ~ மார்கழி 2001**

# பொறுப்புக்கள் (Responsibilities)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான்" உன்னுடன் சங்கமிக்க,
நல்ல உள்ளத்தை உருவாக்க.....

"நான்" கொணரும் உளவியல்
கருத்துக்களை உன்னுடன் பகிர.....

ஆண்டுக்கு ஆறு தடவை
உங்கள் கரங்களில்

தனிப்பிரதி 15/=
ஆண்டு சந்தா
உள்ளூர் - 100/=
வெளியூர் - 5 $

முகவரி:

நிரந்தரம்
"நான்",
டி மசனட் குருமடம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

தற்காலிகம்
"நான்",
டி மசனட் குருமடம்,
சில்லாலை, பண்டத்தரிப்பு,
யாழ்ப்பாணம்
இலங்கை.

J.S.Printers, Sillalai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org